Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஹெனி

பல், மூக்குக் கண்ணாடியகம்

- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

பிரதான வீதி, பருத்தித்துறை

540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 13 (06.01.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:97

# கடற்படைக்கு ரோந்துக் கப்பல்; அமெரிக்க அதிகாரிகள் வருகை!

(கொழும்பு)

**அமெரிக்கக் கடற்படையின் கரையோரப் பாதுகாப்புப் படையின் 'கரேஜஸ்' கப்பலை இலங்கை கடற்படைக்கு வழங்குவது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.**

**அமெரிக்க கரையோர காவற்படை மற்றும் பாதுகாப்பு கூட்டிணைவு ஏஜென்சி ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவே கொழும்புக்கு விஜயம் செய்திருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அமெரிக்க காவற்படையின் சேவையிலிருந்து நீக்கப்பட்ட கரேஜஸ் என்ற ரோந்துக் கப்பல் இலங்கைக் கடற்படைக்கு வழங்க அமெரிக்கா இணங்கியிருந்தது.

இந்தக் கப்பலை வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கே அமெரிக்க அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர். இந்தக் குழுவினர் இலங்கையிலுள்ள துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அத்துடன் கரேஜஸ் கப்பலை இலங்கைக் கடற்படைக்கு வழங்குவது குறித்த நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன் இலங்கை கட்றபகுதி குறித்த தரவுகளையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ரோந்துக் கலம் கரேஜஸ்




| | |
|---|---|
| வகை | - கரேஜஸ் (Courageous, WMEC -622) |
| தயாரிப்பு | - அமெரிக்க கப்பல் கட்டும் நிறுவனம். |
| வெள்ளோட்டம் | - 1967 மார்ச் 18 |
| சேவையிலிருந்து நீக்கம் | - 2001 செப்ரெம்பர் 19 |
| பெறுமதி | - 30லட்சத்து89 ஆயிரத்து 429 டொலர். |
| நீளம் | - 210அடி 6அங்குலம். |
| அதிகூடிய வேகம் | - 18நொட்ஸ் |
| பணிபுரிவோர் | - 12 அதிகாரிகளும், 63 பணியாளர்களும். |
| ராடர் வசதி | - ஏ.என்/எல்.பி.எஸ்.23, 2x எல். பி.எஸ் - 66 |
| ஆயுத தளபாடங்கள் | - 1x எம்.கே 22 3-அல்/ 50:<br>2xஎம் 211B .50 கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள் - (1968)<br>1xஎம் 63 .38 25மி.மி இயந்தரத்தப்பாக்கி<br>2xஎம்-2எச்.பி50 இயந்திரத்துப் பாக்கிகள் (1941) |

# சமாதான முயற்சிகள் குறித்து ஆராய அமெரிக்கப் பிரதிநிதிகள் வருகின்றனர்!

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறவுக்கான குழுவின் உறுப்பினர்கள் அடுத்தவாரம் கொழும்புக்கு வரவுள்ளனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த இந்த உறுப்பினர்கள் கொழும்பு விஜயம் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் குழுவினர் சமாதான முயற்சிகள் குறித்து விரிவாக அறிந்துகொள்ளவிருப்பதாகவும், இருதரப்பு விவரங்கள் குறித்து ஆராய விருப்பதாக தெரியவருகிறது.

அத்துடன் இலங்கையில் தங்கியிருக்கும் போது பல்வேறு அரச அதிகாரிகள் அரசியல் தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்கள் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நயினாதீவு ரஜமகா விகாரையில் புத்தபகவானின் திருவுருவச் சிலையை நிறுவுவது தொடர்பாக செய்தியாளர் மாநாட்டிற்கு பலாலிக்கு அழைக்கப்பட்டிருந்த ஊடக

# சமாதான முயற்சிகளின் நிலைகுறித்து ஹெல்கிசனுடன் மொறகொட பேச்சு!

(ஒஸ்லோ)

குழுவின் தலைவரான விதார் ஹெல்கிசன் மற் னெடுப்புகளை இடைநிறுத்துவதாக நோர்வே

## செய்தியாளர்கள் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நயினாதீவு ரஜமகா விகாரையில் புத்தபகவானின் திருவுருவச் சிலையை நிறுவுவது தொடர்பாக செய்தியாளர் மாநாட்டிற்கு பலாலிக்கு அழைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள், பலாலி விமான நிலையத்தில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

நேற்றையதினம் நயினாதீவு ரஜமகா விகாரையில் புத்தபகவானின் 4 அடி உயரச் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்வதற்காக அஸ்கிரிய,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளின் நிலைகுறித்து ஹெல்கிசனுடன் மொறகொட பேச்சு!

(ஒஸ்லோ)

அரசாங்கத் தரப்பு சமாதான பேச்சுக் குழுவின் முக்கியஸ்தரும் விஞ்ஞான கைத்தொழில் நுட்ப அமைச்சருமான மிலிந்த மொறகொட, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளர் குழுவின் தலைவரான விதார் ஹெல்கிசன் மற்றும் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையிலான முறுகல் நிலை தவிரமடைந்ததையடுத்து தமது சமாதான முன்னெடுப்புகளை இடைநிறுத்துவதாக நோர்வே அறிவித்திருந்தது.

இதன் பின்னர் இலங்கை அரச பிரதிநிதி ஒருவருடனான நோர்வே தரப்பின் முதலாவது சந்திப்பாக இது அமைந்துள்ளது.

கடந்த வாரம் அமெரிக்காவுக்கு சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கு அமெ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒழுங்கான தலைமைத்துவத்தின் கீழ்

# சிங்கள அரசு பேச்சுக்கு வரும் என்ற நம்பிக்கை எமக்கு அருகிவருகின்றது!

## புலிகளின் பிரமுகர் பாலகுமாரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒழுங்கான தலைமையின் கீழ் சிங்கள அரசாங்கம் பேச்சுக்குவரும் என்ற நம்பிக்கை அருகிப்போகிறது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்ற அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சிங்கள அரசாங்கங்களின் செயற்பாடுகள் யாவுமே காலங்காலமாக வெறும் ஏமாற்று வித்தைகளாகவே வளர்ந்துவந்துள்ளன. ஆனால், அவற்றிற்கெல்லாம் தமிழர் ஏமாறும்நிலை தற்போது மாறிவிட்டது. தமிழரை இனியாரும் ஏமாற்றமுடியாது. ஓரணியில் ஒன்றுபட்டுள்ள தமிழினத்தை பிரிவுபடுத்தவோ, நசுக்கவோ முடியாது. இலங்கை அரசும், அதன் உடன் பாட்டுச் சக்திகளும் விழிக்கின்றன.

இனியும் திடமானதொரு தலைமையின் கீழ் சிங்கள அரசாங்கம் ஒன்று தமிழருடன் பேச்சுவார்த்தைக்கு வரும் என்ற நம்பிக்கை எம்மக்கள் மத்தியில் இல்லாது போய்க் கொண்டிருக்கின்றது.

ஒழுங்கான ஒரு தலைமை உருவாக வேண்டும் என ஏங்கும் சிங்கள மக்களுக்கும் ஏமாற்றத்தினை அளிக்கும் வகையில் சிஹல உறுமயவும், ஜே.வி.பியும் இணைந்துகொண்ட ஓர் பெரும்பான்மைக் கட்சியே அரசமைக்கும் வாய்ப்பு உருவாகி வருகின்றது.

யாழ்குடாநாட்டுக்குவரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மக்களின் நாடி, நரம்புகளைப் பிடித்துப் பார்த்து எவ்வாறு அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து வேறுபடுகின்றார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனோ - மலிக் சமரசப் பேச்சு அடுத்தவாரம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும்-பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் இடையிலான அரசியல் அதிகார இழுபறிக்குத் தீர்வுகாணும் நோக்கில் அமைக்கப்பட்ட மனோதித்தவெல-மலிக் சமரவிக்கிரம குழுவின் பேச்சுக்கள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிறிஸ்மஸ், புதுவருட விடுமுறையை முன்னிட்டு இடைநிறுத்தப்பட்ட இந்தப் பேச்சுக்கள் அடுத்தவாரம் மீள ஆரம்பிக்கப்படவிருப்பதா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி புஷ்ஷுக்கு அமைச்சர் மகேஸ்வரன் கடிதம்!

## இலங்கைத் தூதுவர் மூலம் அனுப்பிவைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள்மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை நீக்குமாறு, இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரன் - அமெரிக்க ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்து, இதற்கான எழுத்துமூலக் கடிதத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லன்ஸ ஸ்டீட்டிடம் கையளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கான தடையை ஏன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி வலயப் போட்டிகளில் பரிசுபெறும் மாணவர்கள் விபரம்!

(ஆழியவளை)

வடமராட்சிக் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட கணித விஞ்ஞானப் போட்டி, பொது அறிவுப்போட்டி, தரம் 11 மாணவர்களுக்கான விசேட செயற திட்டம் ஆகியவற்றில் கூடிய புள்ளி களைப்பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வழங்கப்பட வுள்ளது.

இந்நிகழ்வில் 111 மாணவர்கள் பரிசில்கள் பெறவுள்ளனர். அவர் களின் பெயர் விபரங்கள் பின்வரு மாறு,

**கணித விஞ்ஞானப் போட்டி**

**வகை I பாடசாலை**

**தரம் 06**

செ.சாருண்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.அரவிந் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுஜவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுதர்சன, (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சர்மிலன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.நிஷாந்தன் (ஹாட்லிக் கல்லூரி),

**தரம் 07**

நா.பவித்திரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.ரஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி), சி.மெக்கிபாரதா (மெதடிஸ்த (பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.விதுரன் (ஹாட்லிக் கல்லூரி), அ.நிதர்சன் (விக்கினேஸ்வராக் கல்லூரி), ரி.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி), பா.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), த.பிரதீபா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடாசாலை).

**தரம் 08**

க.உமாசுதன் (ஹாட்லிக் கல்லூரி), பா.குருபரன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சு.அபிராமி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.இராகுலசீதன் (ஹாட்லிக் கல்லூரி), ந.நிருஷ்ணி (வட.இந்து மகளிர் கல்லூரி), த.இந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை),

**தரம் 09**

கே.வாகீசன் (ஹாட்லிக் கல்லூரி), க.கௌசிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.சேயந்தன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), க.கார்த்திஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), க.சிந்துஜா (வட.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.மோகனப்பிரியன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் 10**

ரி.சுபேர்திரராஜா (ஹாட்லிக் கல்லூரி), வே.சுகன்யா (வட.இந்து மகளிர் கல்லூரி), க.தர்மினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வி.நிஷாந்தி (வட.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.ரஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), பி.ஜானகி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வி.சிந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி.மாதுளா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**தரம் 11**

இ.ராகுலன் (ஹாட்லிக் கல்லூரி), க.பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி), அ.ஜசிந்தா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சு.அனுதீபா (விக்னேஸ்வராக் கல்லூரி), க.உமா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ம.அனந்தினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**வகை II பாடசாலை**

**தரம் 9**

செ.பாமினி (வல்வெட்டி இ.த.க. பாடசாலை), த.சுகந்தன் (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), கி.பிரியதர்சன் (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), கோ.நிஷாகர் (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), சு.சுஜீகரன் (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), உ.உதயலோஜினி (இமையாணன் அ.த.க.பாடசாலை), நி.தர்ஷிகா (சென்தோமஸ் றோ.க.த.க.பாடசாலை),

**தரம் 10**

சி.பிரண்யா (கம்பர்மலை அ.த.க. பாடசாலை), கோ.கிருஸ்காப்பிரியா (இமையாணன் சிவப்பிரகாசம் வித்தியாலயம்), எஸ்.விஜிதா (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), இ.ரமணகாந் (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), த.கோபு (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), பி.யோசப்மயூரன் (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), இ.பவித்திரா (வலவெட்டி இ.த.க.பாடசாலை),

**தரம் 11**

க.கலைவாணி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), இ.சங்கீர்த்தா (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), தெ.சுகந்தா (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), த.சரண்யா (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), ச.அருண்நேரு (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), சி.பிரசாந் (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), க.கிருஜா (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), பு.ஜனர்தினி (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்).

**தரம் 11**

விசேட செயற்திட்ட கணித பாடத்தில் கூடிய புள்ளி பெற்ற மாணவர்கள் -

இ.ராகுலன் (ஹாட்லிக் கல்லூரி), சீ.சாரங்கன் (ஹாட்லிக் கல்லூரி), க.கலைவாணி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), ரி.விஜிதா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பி.ஜாதவசிங்கம் (ஹாட்லிக் கல்லூரி), க.சுகிர்தா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), க.பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி), தி.சர்மிலா (வட.இந்து மகளிர் கல்லூரி), பி.சௌமியா (வட.இந்து மகளிர் கல்லூரி), ம.அனர்தினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மா.விஜிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), க.நிலாகரன் (ஹாட்லிக் கல்லூரி), அ.யசிந்தா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), பொ.ஜீவிதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), கு.கணேசானந்தன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), இ.தக்ஷிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

விஞ்ஞான பாடத்தில் கூடிய புள்ளிகள் பெற்றோர் -

ம.அனந்தினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பி.மாதவசிங்கம் (ஹாட்லிக் கல்லூரி), ஆர்.ராகுலன் (ஹாட்லிக் கல்லூரி), வை.சிவதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), க.கலைவாணி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), சி.பிரசாந் (ஹாட்லிக் கல்லூரி), இ.கார்த்திகா (வட.இந்து மகளிர் கல்லூரி), ஜீ.பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி), பி.சௌமியா (வட.இந்துக் கல்லூரி), தி.சர்மிளா (வட.இந்து மகளிர் கல்லூரி), சீ.சாரங்கன் (ஹாட்லிக் கல்லூரி), வி.இந்துஷன் (ஹாட்லிக் கல்லூரி), த.பூஜித்திரேயி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), க.திவாகரன் (ஹாட்லிக் கல்லூரி), த.சுவர்ணராஜ் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ச.முரளிதரன் (ஹாட்லிக் கல்லூரி), அ.அனுதீபா (விக்கினேஸ்வராக் கல்லூரி).

பொது அறிவுப் போட்டி முடிவுகள்-

**வகை I பாடசாலை**

1 ஆம் இடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி -

சி.மாதங்கி, க.சுகிர்தா, ம.அனந்தினி, கௌ.சரண்யா, கை.கீதா.

அதிகூடிய புள்ளிபெற்ற மாணவர்கள் விபரம் -

அ.யசிந்தா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), கு.கணேசானந்தா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**வகை II பாடசாலை**

1 ஆம் இடம் வல்வெட்டி இ.த.க. பாடசாலை -

த.சரணியா, செ.யாமினி, சி.நிரோஜினி, இ.புவித்திரா, த.சுகந்தன்.

கூடிய புள்ளிபெற்ற மாணவர்கள் விபரம் -

த.சரணியா (வல்வெட்டி இ.த.க. பாடசாலை), க.கலைவாணி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), எஸ்.சங்கநாதன் (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்). (122)



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரனையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

### யாழ்.பல்கலைக்கழக

## ஊழியர் சங்க அங்கத்தவர்களுக்கு இன்று அவசர கலந்துரையாடல்!

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானமொன்றை மேற்கொள்வதற்காக - பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களை இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கணக்கு பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு முரணான வகையில் நியமனம் செய்தல், ஊழியர் சங்கம் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுப்பு வழங்கல், தனியார் பாதுகாப்பு சேவை, தனியார் சுகாதார சேவை ஆகியவற்றை பல்கலைக்கழக பணிகளுக்கு அமர்த்தல், ஊழியர் கடன் வழங்கலில் மீளவும் குழறுபடி போன்றவற்றுக்கு எதிராகவே தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

அத்துடன், பாதுகாப்புப்பகுதி அங்கத்தவர்கள், நீர்விநியோக அங்கத்தவர்களுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதெனவும், மற்றையவர்கள் அவர்களது அலுவலகங்களில் கையொப்பமிடாது மண்டபமுன்றலில் ஒன்றுகூடுமாறும் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## மைதானம் புனரமைப்பு!

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பார்வையாளர் அரங்கு, விளையாட்டு மைதானம் என்பன புனரமைக்கப் பட்டுவருகிறது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது - கல்லூரியின் சிவதாசன் பார்வையாளர் அரங்கு, விளையாடடு மைதானம் ஆகியவற்றை நவீன முறையில் புனரமைப்பதற்கு பழைய மாணவர்களின் இடைக்கால நிர்வாகததினர் நிதியுதவி செய்துள்ளனர்

பழைய மாணவர்களின் இடைக்கால நிர்வாகக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளதால், மானிப்பாய் இந்துக்கல்லூரி புதுப்பொலிவுடன் காட்சிதரும் என பழைய மாணவர்களின் இடைக்கால நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (91)

## கருத்தரங்கு

அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தால் நடாத்தப்படும் முழு நிலாநாள் கருத்தரங்கு, நாளை மாலை 3.00 மணிக்கு பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறும். சிறப்புக் கருத்துரையாக "குடும்ப உறவில் தொடர்பூடகங்களின் செல்வாக்கு" என்னும் கருப்பொருளில் முன்னாள் யாழ். கோட்டக்கல்வி அதிகாரியும், எழுத்தாளருமான செம்பியன் செல்வன் கருத்துரையாற்றுவார்.


திருமறைக் கலாமன்றம்
CENTRE FOR PERFORMING AETS
விண்ணப்பங்கள் கோரல்

கவின் கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS
2004 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு பின்வரும் பாட நெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
❑ வாய்ப்பாட்டு ❑ பரதம் ❑ கதகளி
❑ ஓர்கன் ❑ மிருதங்கம் ❑ வயலின் ❑ கிற்றார்
❑ வீணை ❑ புல்லாங்குழல் ❑ சித்திரம்
இப்பாடநெறிகளுக்கு குறைந்தளவு கட்டணமே அறவிடப்படும்

நாடகப் பயிலகம்
SCHOOL OF DRAMA
எமது மன்றத்தால் வருடாந்தம் இலவசமாக நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2004 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
நாடக்க கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெறவிரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது.

சிறுவர் கலைக்கூடம்
CHILDREN'S THEATRE
இக் கலைக்கூடத்தில், 2004 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் சேர்ந்து பயில விரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனத்திற் கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு, ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப் படுகின்றது.
பிரிவு I - 5-12 வயதுவரை
பிரிவு II - 13-16 வயதுவரை

குறிப்பு:-
★அனைத்துப் பிரிவுகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி 20.01.2004 ஆகும்.
★விண்ணப்பப் படிவங்களை நேரடியாக யாழ்.மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021 – 222 2393
e-mail: cpajaffna@eureak.lk
website: WWW.cpateam.org. (சி-2042)
பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்



நிறைஞ்சனலஸ் சங்கானை
சூர்யா, ஜோதிகா நடித்த
காக்க காக்க
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)



ராஜா யாழ்ப்பாணம்.
8 ஆம் திகதிவரை
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா
நடித்த
திருமலை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2005)



# Tamils Rehabilitation Organization

*Head office*

*03.01.2004*

**APPLICATIONS CALLED FOR TEACHERS FOR TRO PRE SCHOOLS WITH INTERNATIONAL STANDARDS**

The service of teachers, trained on early childhood development, pre school education and care is required. They should have substantial knowledge of child psychology, English and techniques to stimulate children to growth and development through play activities. They also should have traits to cultivate good and amicable relationship with children, parents and other stakeholders.

The administration will provide accommodation and food. The scale of the salary will be fixed on the basis of qualifications and experience. The pre school will be located in Kilinochchi.

Applications for above should reach TRO Head Office, Kandy Road, Kilinochchi before 10-01-2004. Interview for the selection will be held at the above address on 13-01-2004 at 10 AM. Those who have applied should be present for the interview Contact Tel.No.021 228 3947.

Executive Director, TRO.

(சி-2043)

நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்



# சர்வதேச அழுத்தங்கள் அதிகரிப்பு; ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி!



இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் வகையில், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறித்து, ஜனாதிபதி அதிருப்தி கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலான அதிகாரப்போட்டிக்கு முடிவு கண்டு, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லும் வகையில் நடவடிக்கைகளைத் தொடரவேண்டும் அல்லது சமாதான முயற்சியில் பெரும் பின்னடைவு ஏற்படும் என, அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் கருத்து தெரிவித்திருந்த ஒருசில நாட்களுக்குள்ளாகவே, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் - ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகண்டு புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை கலந்த வலியுறுத்தல் காரணமாகவே, ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய அரசியல் நெருக்கடியினை விரைவில் முடிவுக்குக்கொண்டு வரவேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் தனித்தனியாகக் கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தினை இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்டெட் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து, நேரடியாக கையளித்திருந்தார். பிரதமருக்கான கடிதத்தினை கடந்த புதன்கிழமை பிரதமரிடம் தூதுவர் கையளித்திருக்கின்றார். இந்தநிலையிலேயே கொலின்பவலின் கடிதத் தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கப் பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவை அண்மையில் நியூயோர்க்கில் சந்தித்து பேசியிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையையடுத்து, இலங்கையில் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணப்படவேண்டியதன் அவசியத்தை அவரும் வலியுறுத்தியிருந்தார்.

இதனிடையே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறு, சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருவதாகவும், இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகள் இலங்கையின் சமாதான முயற்சி தடைப்பட்டிருப்பதுகுறித்து கவலை கொண்டுள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் அரசியல் குழு உருவாக்கிய

# இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பு!

முஸ்லிம் அரசியல் விவகாரக் குழுவால் ஆராயப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த யோசனைகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான கட்சியின் முக்கியஸ்தர்கள் அடங்கிய அரசியல் குழுவினரே இந்தத் தீர்வுத்திட்டத்தினை அங்கீகரித்துள்ளனர்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிக்கும், அரசாங்கத்தின் தலைவராகச் செயற்படக்கூடிய பிரதமருக்கும் இடையிலான வேறுபாடுகள் மற்றும் அரசியல் அதிகாரப்போட்டிகள் முதலானவை தீர்ந்தபின்பே, இந்தத் தீர்வுத் திட்டயோசனைகள் சமர்ப்பிக்கப்படும் என, கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட அமெரிக்காவிற்கு உரிமையில்லையாம்

## ஜே.வி.பியினர் கூறுகின்றனர்

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட, அமெரிக்காவிற்கு எந்தவித உரிமையும் இல்லையென, ஜே.வி.பி தெரித்துள்ளது.

அண்மையில் அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்புச்செயலர் விடுத்த அறிக்கைக்குப் பதிலாகவே ஜே.வி.பி. இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி மேலும தெரிவிக்கையில் - அமெரிக்கப் பிரதிப்பாதுகாப்புச் செயலர், இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்வதை அனுமதிக்க முடியாதெனக் கூறியிருப்பது, அமெரிக்கா உள்நாட்டுப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுகின்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது எனத்தெரிவித்துள்ளது. அத்துடன், இலங்கையை இரண்டாகப் பிரிப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றதெனவும் ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றுவதனைக் காணலாம்.

# மத முரண்பாடுகளைக்களையும் மாநாடு இன்று அலரிமாளிகையில்!

மதங்களிடையே முரண்பாடுகள் ஏறபடுவதனைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கான மாநாடொன்று இன்று அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் - பௌத்த சாசன அமைச்சு, இந்து கலாசார அமைச்சு, கிறிஸ்தவ மதவிவகார அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனின் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், மதங்களிடையே வன்முறைகளைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்த திட்டத்தினை அமைச்சுகளின் செயலாளர்கள சமர்ப்பிக்கவுள்ளனர். மதங்களுக்கிடையிலான வன்முறைகள் குறித்து பிரதமர் கூடியகவனம் செலுத்துவதாகவும், இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இத்தகைய வன்முறைகள் எழாது தடுக்க, 24 மாவட்டங்கள் மற்றும் 315 பிரதேச செயலகங்களில் சமாதான குழுககளை அமைப்பது என்றும், இதன் மூலம் மதங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டிவளர்ப்பது எனவும் பிரதமர் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவில் நான்கு மதங்களையும் சேர்ந்த கல்விமான்கள், சமூகசேவையாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களை நியமிப்பது எனவும் -

இந்த விடயத்தில் ஊடகங்களும் தமது பணியினை செவ்வனே செய்ய வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இத்தகைய வன்முறைகளைத் தடுக்க பௌத்த சாசன, இந்துசமய, கிறிஸ்தவ, முஸ்லிம் சமய விவகார அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் ஆணைக்குழு தலைவர் இம்மாதம் இலங்கை வரவுள்ளார்

இந்தியத் தேர்தல் சீர்திருத்த முறைகள் குறித்து கருத்து தெரிவிப்பதற்கென, இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரும், முன்னாள் தலைவரான டி.என்.சேஷனும் இந்த மாதம் கொழும்பு வரவுள்ளனர்.

தேர்தல் சீர்திருத்த தெரிவுக் குழுவின் அழைப்பை ஏற்றே, இவர்கள் கொழும்பு வருகின்றனர். இவர்கள் தேர்தல் சீர்திருத்த தெரிவுக் குழுமுன் ஆஜராகி, இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், அதன் செயற்பாடுகள் குறித்து கருததுக்களைத் தெரிவிக்கவுள்ளனர்.

இவர்களது வருகையை தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவின் தலைவரும், மக்கள் ஐக்கிய முன்னணி தலைவருமான தினேஷ் குணவர்த்தன உறுதிசெய்துள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஒரு மாகாணத்திலாவது வாக்களிப்பு இயந்திரத்தை அறிமுகம் செய்ய திட்டமிட்டு, செயற்பட்டு வருகிறோம். அதற்கு முன் அது தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தை பெறவேண்டும். அது தொடர்பான சட்டமூலத்தை அடுத்த மாதம் முதல்வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான சகல நடவடிக்கைகளையும் செய்யவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இயந்திரம்மூலம் தேர்தலுக்கு ஏற்படும் செலவில் 40 வீதத்தை குறைக்கமுடியும். அத்துடன், ஆள் மாறாட்டம், கள்ளவாக்குப் பதிவு ஆகியவற்றையும் இதன் மூலமாகத் தடுக்கலாம்.

இயந்திரம்மூலம் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம். ஆகையால் - அடையாள அட்டை கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்ற சட்டமும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

இயந்திரம் மூலம் வாக்களிப்பை அறிமுகம் செய்வதன்மூலம், அரசாங்க ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் தொகையையும் குறைக்கமுடியும் என்றும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

### நிர்வாகக் குழுக் கூட்டம்

சலனசித்திரம் - யாழ்ப்பாணம் அமைப்பின் இந்த ஆண்டுக்கான முதலாவது நிர்வாகக் குழுக்கூட்டம் நாளை மு.ப. 10 மணிக்கு கொடிகாமம் வீதி கரவெட்டியிலுள்ள சம்மேளனக் கிளைச்செயலகத்தில் வி.எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

### விஷம் கலந்த மதுபானம் அருந்திய 5 பேர் மரணம்

விஷம் கலந்த மதுபானத்தை உட்கொண்டதனால், இதுவரை ஐந்துபேர் உயிரிழந்துள்ளனர். இந்தச்சம்பவம் காலி காராப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே 13 பேர் இந்த விஷம் கலந்த மதுபானத்தை அருந்தி ஏற்பட்ட பாதிப்பினால் நோய்வாய்ப்பட்டு, காலி காராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தற்சமயம் மதுபானம் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்ற பிரதேசத்திற்குப் பொலிஸார் விரைந்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்கள் இரசாய பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

-ஏழு மாகாணங்களுக்கும் -

# 76 மேலதிக உறுப்பினர்கள் தெரிவு ; மாதாந்தம் 200 மில்லியன் செலவு!

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஏழு மாகாணசபைகளுக்குமான தேர்தல்களால், மேலதிகமாக 76 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும் - இவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதால், மேலதிகமாக வருடாந்தம் 200 மில்லியன் ரூபா செலவிடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும், தெரியவருகிறது.

மேலதிகமாகத் தெரிவுசெய்யப்படும மாகாணசபை உறுப்பினர்களுக்கு அனைததுத் தேவைகளையும் கவனிப்பதற்காகவே வருடாந்தம் 200 மில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கவேண்டியுள்ளது.

இறுதியாக நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கீட்டின் அடிப்படையிலேயே, மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மேலதிகமாக 76 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதன்மூலம், ஏழு மாகாண சபைகளிலும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 456 ஆக அதிகரிக்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

மேல்மாகாண சபைக்கு 35 மேலதிக உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதன்மூலம், அந்த மாகாணசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 139 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. சனத்தொகையின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் 14 மேலதிக உறுப்பினர்களும், கம்பஹா மாவட்டத்தில் 17 மேலதிக உறுப்பினர்களும், களுத்துறை மாவட்டத்தில் மேலதிகமாக 4 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் மேலதிகமாக 9 உறுப்பினர்கள் தெரிவாகவுள்ளனர். தென்மாகாணத்தில் 8, வடமேல் மாகாணத்தில் 10, வடமத்திய மாகாணத்தில் 5, ஊவா மாகாணத்தில் 4, சப்ரகமுவ மாகாணத்தில் 4 என மேலதிக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

ஒரு மாகாணசபை உறுப்பினருக்கு மாதாந்தம் 18 ஆயிரத்து 50 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. அத்துடன், சுங்கத் தீர்வையற்ற வாகனம், மாதாந்த எரிபொருள் மேலதிகக்கொடுப்பனவாக 3750, சாரதி மேலதிகக்கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 1750, வீடு நிர்வாகக் கொடுப்பனவாக ரூபா 500, ரூபா 10 ஆயிரத்துககு குறையாத கட்டணமுடைய தளஇணைப்புத் தொலைபேசிச் செலவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணமாக ரூபா 1000, மற்றும் மாகாண சபைக் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் நாளொன்றுக்கு ரூபா 250 விசேட படியாகக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

அத்துடன், ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரும் ஒரு செயலாளர், தட்டெழுத்தாளர் மற்றும் அலுவலக உதவியாளரை வைத்திருக்க முடியும். அவர்களுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கமே வழங்க முடியும்.

இதேவேளை, மாகாண அமைச்சர் ஒவ்வொருவருக்கும் ரூபா 30 ஆயிரம் முதல் 33 ஆயிரம்வரை சம்பளமாக வழங்கப்படுகிறது. அத்துடன் மாகாண அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று அல்லது நான்கு வாகனங்கள், ஏழு அலுவலக ஊழியர்கள் மற்றும் இருப்பிட வசதிகள் வழங்கப்படுகின்றன.

மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை, சனத்தொகை அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. 40 ஆயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையிலேயே உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதாகவும், இதனாலேயே 76 மேலதிக உறுப்பினர்களை நியமிக்கவேண்டியிருப்பதாகவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தோல்வியினைத் தவிர்த்துக்கொள்வதற்காக போராடவேண்டியநிலையில் அவுஸ்திரேலியா



பாலோ ஒன் நிலைக்கு அவுஸ்திரேலிய அணி தள்ளப்படபோதும், இந்திய அணி தொடர்ந்து விளையாடி 211 ஓட்டங்களுடன் ஆட்டத்தை முடித்துக்கொண்டதாக அறிவித்த தால், இறுதி நாளான இன்று அவுஸ்திரேலிய அணி 442 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் உள்ளது.

சிட்னியில் நடைபெறும் இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இறுதி டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றது.

3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில், ஆஸ்திரேலியா 6 விக்கெட் இழப்புக்கு 342 ஓட்டங்கள் எடுத்திருந்தது. காடிச் 51 ஓட்டங்களுடனும், பிரட்லீ ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆடிக்கொண்டிருந்தனர்.

நேற்று ஆட்டம் தொடங்கி சிறிது நேரத்தில் பிரட்லீ ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை கும்ளே கைப்பற்றினார். 8 ஆவது விக்கெட்டுக்கு காடிச்சுடன் ஜிலெஸ்பி ஜோடி சேர்ந்தார். இந்திய வீரர்களின் பந்துவீச்சை காடிச் நம்பிக்கையோடு எதிர்கொண்டார். அவர் சிறப்பாக விளையாடி 'சதம்' அடித்தார். ஜிலெஸ்பி அவருக்கு உறுதுணையாக இருந்தார்.

இந்த ஜோடி தாக்குப் பிடித்தாடியது. கும்ளே இந்த ஜோடியைப் பிரித்தார்.

ஸ்கோர் 467 ஆக இருந்தபோது காடிச் ஆட்டம் இழந்தார். அவர் 166 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் 125 ஓட்டங்களையும் எடுத்தார். அடுத்து வந்த வீரர்களை கும்ளே எளிதில் 'அவுட்' ஆக்கினார். அவுஸ்திரேலியா 474 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கும்ளே 46.5 ஓவர்கள் பந்துவீசி 141 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுககளைக் கைப்பற்றினார். அவரது பந்துவீச்சு அவுஸ்திரேலிய வீரர்களுக்கு சவாலாக இருந்தது.

அவுஸ்திரேலிய அணி 'பாலோ ஒன்னை' தவிர்க்க 506 ஓட்டங்கள் எடுக்கவேண்டும். ஆனால், அந்த அணி 474 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து பாலோ ஒன் ஆனது.

ஆனால், இந்திய அணியின் கப்டன் கங்கூலி அவுஸ்திரேலியாவிற்கு பாலோ ஒன் கொடுக்கவில்லை. 231 ஓட்டங்கள் முன்னிலையில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸை



ஆடியது. சோப்ராவும், ஷேவாக்கும், தொடக்க வீரர்களாக இறங்கினார்கள். ஷேவாக்கின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

ஸ்கோர் 11 ஆக இருந்தபோது சோப்ரா இரண்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜிலெஸபியின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து ராவிட் களமிறங்கினார். 73 ஓட்டங்களுடன் இந்திய அணி இருக்கும்போது, சேவாக் 47 ஓட்டங்களில் மெக்கில் பந்தில் கிலெஸ்பியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கர் களமிறங்கினார்.



ராவிட் 91 ஓட்டங்களும், டெண்டுல்கர் 60 ஓட்டங்களும் எடுத்த நிலையில் இந்திய அணி 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, தனது இரண்டாவது இனிங்ஸை நிறுத்தியது. அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற 442 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா 10 ஓட்டங்களைப் பெற்றநிலையில் நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது.

# அயல்நாட்டில் பந்து வீசுவது எப்படியென்று கற்றுவிட்டேன்

## அனில் கும்ளே பேட்டி

முதல் இனிங்சில் இந்திய அணி மிகப்பெரிய ஸ்கோரை எட்டியது தனது வேலையை இலகுவாக்கியதாகவும், அதேசமயம் அயல்நாட்டுத் தொடர்களில் பயனுள்ள முறையில் எப்படி பந்துவீசுவது என்பதை கற்றுக்கொண்டு விட்டதாகவும் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளரான அனில்கும்ளே தெரிவித்தார்.

இந்தப்பயணத்துக்காக மிகப்பெரியளவில், நல்லமுறையில் தயாராகினோம். நல்ல முறையில் துடுப்பாட்டம் அமையவேண்டும் அதாவது, ஓட்டங்களுக்கு மேலாக ஓட்டங்களைக் குவிக்கவேண்டும் என்ற முடிவுடன் இங்குவந்தோம். அதை நிறைவேற்றிவிட்டோம். அதன் அடிப்படையில் 705 ஓட்டங்கள் என்பது மிகப்பெரிய விசயம் பந்துவீச்சில் நிறைய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ள இந்த மிகப்பெரிய ஸ்கோர் எனக்கு உதவியாக இருந்தது என்று கூறினார்.

அயல்நாட்டுத்தொடர்களில் விக்கெட்டுக்களை வீழ்த்துவது எப்படி என்பதை உணர்ந்துவிட்டேன். இதுவிக்கெட்டுக்களைவீழ்த்த எனக்கு மிகமிக உதவியாக உள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளில் சிறப்பாக பந்துவீச 13 வருடகாலங்கள் எனக்கு தேவைப்பட்டது என்றும் தெரிவித்தார்.

# விளையாட்டு

# இந்திய கிரிக்கெட் அணியினர் மார்ச்சில் பாகிஸ்தான் செல்வர்

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி - எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என்று, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா அறிவித்துள்ளார்.

மார்ச் மாதம் முதலாம் திகதிமுதல், ஏப்ரல் மாதம்வரை இந்தத் தொடர் நடைபெறும் என்றும், மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் செல்வதாகவும், இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, பாகிஸ்தானுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யும் என்றும், டால்மியா தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்திற்கு பின்னர் பேட்டியளித்த டால்மியா-

'பாகிஸ்தானில் இருந்து திரும்பிய பின்னர் இந்திய அணி பங்களாதேஷ் செல்லும். அங்கு பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் இந்தியா விளையாடும். அதன் பின்னர் இந்திய வீரர்களுக்கு இரண்டு மாத ஓய்வு அளிக்கப்படும். ஜூலையில் ஆசியக் கோப்பைப் போட்டியில் இந்தியா கலந்துகொள்ளும். அடுத்ததாக ஆகஸ்ட் மாதத்தில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முத்தரப்பு தொடர் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான இடம் இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. ஸ்கொட்லாந், அயர்லாந்து, அல்லது போலந்தில் இந்த முத்தரப்பு தொடர் நடைபெறவாய்ப்பிருக்கிறது என்று, டால்மியா தெரிவித்தார்.

வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடங்க இருக்கும் சாம்பியன் டிராபிக்கு முன்னதாக 1,3, மற்றும் 5 ஆம் திகதிகளில் இங்கிலாந்துக்கு எதிராக 3 ஒருநாள் போட்டிகளில் இந்தியா விளையாட உள்ளதாகவும் டால்மியா மேலும் தெரிவித்தார்.

# இப்படியானதொரு நெருக்கடியை இதற்கு முன் அனுபவித்ததில்லை!

## அவுஸ்திரேலிய வீரர் ஜஸ்டின் லாங்கர் தெரிவிப்பு

இந்திய துடுப்பாட்ட வீரர்களிடமிருந்து அவுஸ்திரேலிய அணி நிறையக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று, அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் லாங்கர் அடித்த சதமானது, இந்தத் தொடரில் அவர் அடித்த 2ஆவது சதமாகும். இதற்கு முன்பு இப்படியொரு நெருக்கடியை தான் சந்திக்கவில்லை என்று, கூறிய லாங்கர் இது குறித்து அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது,

இந்திய அணியின் வீரர்கள் மிகப் பொறுமையுடன் விளையாடுகின்றனர். துடுப்பாட்டத்தில் அவர்களின் விளையாட்டு வியப்பளிப்பதாக, அற்புதமாக உள்ளது. எங்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப் போன்று இதற்குமுன் நான் அனுபவித்தது இல்லை. துடுப்பாட்டம், பந்துவீச்சு மிகப் பெரிய ஸ்கோரைச் சமாளிப்பது போன்ற நெருக்கடிகள் இந்தத் தொடரில் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தொடரில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், இந்திய அணியின் துடுப்பாட்டம்தான். துடுப்பாட்டத்தில் இந்தியாவிடமிருந்து நாங்கள் நிறையக் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டு நாட்கள முழுவதுமாக களத்தடுப்பு செய்தது, எனது துடுப்பாட்டத்தினை பாதித்துவிட்டது. எனது கிரிக்கெட் வாழ்வில் முதன்முறையாக துடுப்பாட்டம் பற்றிக் கவலைப்படுவதை விடுத்து, நேரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியநிலை ஏற்பட்டு விட்டது. இதற்குமுன்பு என்னுடைய கிரிக்கெட் வாழ்வில் இப்படி நடைபெற்றது இல்லை. எங்களுக்கு இது வழக்கத்துக்கு மாறான ஒன்றாகும். நேரத்தைக் கடத்துவதை விடுத்து ஓட்டங்கள் குவிப்பதில் நாங்கள் ஈடுபட்டோம். இதுதான் எங்களது இயல்பான விளையாட்டு. ஓட்டங்களைக் குவிக்காமல் நேரத்தைக்கடத்துவது போல் விளையாடினால் நெருக்கடிதான் அதிகரிக்கும். இது எதிரணிக்கும் சாதகமாகிவிடும். ஆனால், கும்ளேயின் பந்தையும் அடித்து விளையாடியிருந்தால் எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டிருக்கும். சர்வதேச தரம் மிக்க பந்து வீச்சாளரான கும்ளேயின் பந்தை அடித்து விளையாடினால் பிரச்சினை எங்களுக்குத்தான் என்று கூறிய லாங்கர், இளம் வீரர் இர்பான் பதானை மனமாரப் பாராட்டினார். இந்த டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறவிருக்கும் ஸ்ரீவ்வோ 2 ஆவது இனிங்ஸில் தனக்கேயுரிய பாணியில் சிறப்பாக விளையாடி, போட்டியை முடிக்க கடினமாகப் போராடுவார் என்றும் லாங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

# அதிக ஓட்டங்களை கொடுத்து பிரட்லீ படைத்த சாதனை!



அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் பிரட்லீ இந்தியாவுக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றினாலும், அதிக ஓட்டங்களைக்கொடுத்து சாதனை படைத்துள்ளார். அவர் 39.3 ஓவர்கள் பந்துவீசி 201 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

70 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்டில் அதிகஓட்டங்களை விட்டுக்கொடுத்த 2 ஆவது அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனையை பிரட்லீ படைத்தார். இதற்கு முன்பு 1938 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் அவுஸ்ரேலிய வீரர் சுமித் 87 ஓவர் பந்துவீசி 298 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட் எடுத்திருந்தார்.

## இரண்டாவது இனிங்ஸில்

# தென்னாபிரிக்க அணி 2 விக்கெட் இழப்பிற்கு 188



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக கேப்டவுணில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட்போட்டியின் நான்காம் நாளான நேற்று, இரண்டாவது இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி ஆட்டநேரமுடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முன்னதாக மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 427 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் கிறிஸ்கைல், அணித்தலைவர் லாரா இருவரும் மிகச்சிறப்பாக துடுப்பெடுத்தாடி, முறையே 116, 115 ஓட்டங்களைப்பெற்றதும், டெஸ்ட் போட்டிகளில லாரா 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததும் சிறப்பம்சமாகும். தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்கள் சார்பில் நெல் 5, பொலக் 2 விக்கெட்டுக்களையும், நிற்னி, கலிஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதன் பின்னர் இரண்டாவது இனிங்ஸை ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்க அணி சொற்ப ஓட்டங்களுக்குள் தனது இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. இதில் முதல் இனிங்ஸில் சதமடித்த றுடோல்ப் இரண்டாவது இனிங்ஸில் ஒட்டமெதுவும் பெறாமலும் அணித்தலைவர் ஸ்மித் 24 ஒட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தற்போது கிப்ஸ் 82, கலிஸ் 63 ஒட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். தென்னாபிரிக்க அணி 293 ஓட்டங்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணியை விட முன்னிலையில் உள்ளது.

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

# பஞ்சரத பவனி சிறப்பு மலர் - 06.01.2004



ஈழமணித் திருநாட்டின் இலங்கு புகழ் யாழ்ப்பாணத்தின் அணி சேர் சப்த தீவுகளில் - செந்தமிழும், சிவநெறியும் சீரோங்க மங்களத் திலகமென மாண்புடன் விளங்கும் காரைநகர் எனும் திவ்வியபதியில "ஈழத்துச் சிதம்பரம்" இனிது அமையப்பெற்றுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைய விளங்கும் கீர்த்திமிகு இந்தச் சிவலாலயத்தில், ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமாள் ஆண்டிகேணி ஐயனாருடன வீற்றிருந்து, வேண்டுவார்க்கு வேண்டும் வரமளிக்கும் சக்திமிகு சகல சித்திதரும் தெய்வமாகக் காட்சிதருகிறார். சைவமக்களின் இதயக் கோயிலாக விளங்கும் தென்னிந்தியாவில் - சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜாரப் பெருமானுக்கு நடைபெறும் மார்கழித் திருவாதிரை உற்சவத்தையும், விழாக்களையும் அடியொற்றி இந்த ஆலயத்தில் நடைபெறும் விழாக்களில்- மார்கழித் திருவெம்பாவை திருவாதிரை உற்சவம் பக்திப் பரவசமிக்க சிறப்பு விழாவாக நடைபெற்று வருகின்றது. அத்தோடு பங்குனி உத்திர மகோற்சவம், ஆடிப்பூர தேவி மகோற்சவம் என வருடத்தில் மூன்று பெருவிழாக்களோடு மற்றும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. எல்லா விழாக்களிலும் மிகச்சிறப்பாக திருவாதிரை விழா நடைபெற்று, அதனது மணிமுடி என இன்று அனைத்து சிறப்பு அம்சங்களும் அமையப்பெற்ற ஸ்ரீ சிவகாம சுந்தரியம்பாள் சமேச ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன், அந்தணப் பெரியார்களின் வேத ஒலிகள் இனிது முழங்க, நாதஸ்வர தவில் வித்துவான்கள் நாதகான இசை பொழிய, தேவாதி தேவர்கள் பூமாரி பொழிய, பல்லாயிரக்கணக்கான அடியார்களது அரோகரா, அரோகரா எனும் பக்த ஒலியிலே அசைந்து, ஆடியாடி தேருக்கு எழுந்தருளி வரும் அற்புதக் காட்சியை காணக்கண்ணாயிரம் வேண்டும்.

தொடர்ந்து, பிரமாண்டமான மூன்றாம் வீதியில் பஞ்சரத பவனிவரும் காட்சி தனிச்சிறப்புவாய்ந்தது. பின்னர் அதிகாலை 2 மணிக்குமேல் நடைபெறும் ஆருத்ரா அபிஷேகம் மற்றும் நாளை பிற்பகல் மூன்று மணிக்குமேல் நடைபெறும் திருவூடல் திருக்காட்சியும் சிறப்பு மிக்கவை. இந்தியாவின் சிதம்பரத்திற்குச் சென்று தரிசனம் செய்யமுடியாதவர்கள் - இங்கு தரிசித்து பேரானந்தம பெருவாழ்வு பெற்று வருகிறார்கள். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை, ஊழிமுதல்வனாக நின்ற ஒருவனை, ஏழை பங்காளனை, முன்னை பழம்பொருட்டு முன்னை பழம் பொருளாக, பின்னைப் புதுமைக்கும் பெயர்த்து, அப்பெற்றியனாக அண்ட சராசரங்களுக்கெல்லாம் அதிபதியான தில்லைக் கூத்தனை ஆர்த்த பிறவி துயர்கெட, நாமெல்லாம் தரிசித்து சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வோமாக.



### துன்பம் துடைக்கும் திருவாதிரை விழா

திருவாதிரை நட்சத்திரம் சூரியனுக்கு மேல் 350 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளதென்றும், 300 சூரியன்களைக் கொள்ளும் பருமனும், ஒரு லட்சம் சூரியன்களின் வெப்பத்தைத் தரும் தன்மையை உடையதென்றும் அறிஞர்கள் கூறுவர். இந்த நட்சத்திரம் சிவபெருமானோடு சமபந்தமுடையது. 'ஆதிரை நாதன்' என்பது சிவபெருமானுடைய பெயர்களுள் ஒன்றாகும்.

திருவாதிரை - 12 மாதங்களில் வருமாயினும் மார்கழி மாத திருவாதிரையே சிறப்புடையது.

திருவாதிரை விழா, மார்கழி மாதத்தில் பூரணையை அடுத்துவரும் திருவாதிரையை முடிவாகக்கொண்டு, அதற்குப் பத்து நாட்களுக்கு முன்தொடங்கி நடத்தப் படுவதாகும். இந்தவிழா சிவபெருமானுக்கு பொது வகையான சிறந்ததாயினும் , அப்பெருமானது அருள் மூர்த்தங்களுள் ஒன்றாகய நடராஜமூர்த்திக்கே சிறப்புடையதாகும்.

இந்த விழா சைவத்தின் உயர் நிலையாக விளங்கும சிதம்பரத்தில் மிகமிக விசேசமாக நடைபெற்றுவருகிறது. அதனைப்போல, ஈழத்து சிதம்பரத்திலும் விதிப்படி நடை பெற்றுவருவது மக்கள் செய்த பெரும்புண்ணியம் ஆகும். பத்து நாள்களும் கூத்தப்பிரான் சந்நதியில் காலையிலும், மாலையிலும் தேவஸ்தான ஓதுவார் மூர்த்தி மு.சுந்தரலிஙகம் அவர்களால் திருவெம்பாவை பாடல்கள் ஓதப்பட்டு வருகின்றன.

சிதம்பரத்துக்குச் செல்லமுடியாத பல்லாயிரக்கணக்கான அடியார்கள் - ஈழத்து சிதம்பரத்துக்கு வந்து கூத்தப்பெருமானை தரிசித்து, அப்பெருமான் அள்ளி அள்ளி வழங்கும் பெருஞ்செல்வத்தைப் பெற்று மன நிறைவுடன் செல்கின்றனர்.

இந்தத் திருவாதிரை விழாவின் ஓர் அம்சமாக இன்று தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. கூத்தப்பிரானும் சிவகாமி அம்மையாரும் பரிவார மூர்த்திகளுடன் ஐந்து தேர்களில் பவனிவரும் அழகைக் கண்டுகளிக்க பல்லாயிரம் கண்கள் வேண்டும். 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்பது இப்பொழுது நினைவுக்கு வருகிறது.

ஈழத்து சிதம்பரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருவாதிரைவிழா தொடர்பாக, ஈழநாடு பத்திரிகையில் விசேட மலரொன்று வெளிவருகின்றமை ஒரு சமயத் தொண்டாகும், சமூக சேவையுமாம்.

சிவத்திரு.க.வைத்தீஸ்வரக்குருக்கள்
ஈழத்து சிதம்பரம் காரைநகர்.


## விளம்பர அனுசரணை வழங்குவோர்:

தொலைபேசி அழைப்புக்களை விரைவாகவும், துல்லியமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
**கண்ணன் தொலைத் தொடர்பு நிலையம்**
வேம்படி, காரைநகர்
T.P: 0602 - 213438
(சி-2040)

ஒற்றுமை, சாந்தி, சமாதானம் நாட்டில் நிலைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**மோகனதாஸ் பல்பொருள் வாணிபம்**
வேம்படி, காரைநகர் (சி-2039)

இறைவனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
**காயத்திரி பல்பொருள் வாணிபம்**
ஆலடி, காரைநகர் (சி-2038)

தேரேறும் பெருமான் எமக்கு அருள் புரியப் பிரார்த்திக்கின்றோம்.
**சிவம் பல்பொருள் வாணிபம்**
ஆலடி, காரைநகர் (சி-2037)

ஒற்றுமையுடன் மக்கள் வாழ தேரேறும் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
**கும்பநாயகி மின் ஒட்டுத் தொழிலகம்**
மணற்காடு, காரைநகர் (சி-2036)

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**காரை துரித காகிதாதிகள் சேவை**
ஆஸ்பத்திரி வீதி, காரைநகர் (சி-2034)

தேரேறும் சிவனின் அருளுக்காக பிரார்த்திக்கின்றோம்.
**சேகரம் ஸ்ரோர்ஸ்**
பழைய கண்டி, காரைநகர் (சி-2032)

தேரேறும் எம்பெருமான் நாட்டில் சாந்தி, சமாதானம், ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.
**க.பரமேஸ்வரன்**
லண்டன் (சி-2041)

உங்கள் இலங்கிலிருந்து உலகெங்குமுள்ள உறவினருடன் INTERNET மூலம் தொடர்பு கொள்ளவும், உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால் / பொதிகள் சேவைகளுக்கு
**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 222 5392 Fax: 222 3214
**திருமுருகன் கொம்நெற்**
இல.46 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
Tel: 222 7310
(சி-2030)

திருமணப் பட்டுப் புடவைகளுக்கும், நவநாகரிக நங்கையரின் ஆடைத் தெரிவுகளுக்கும் நாடவேண்டிய இடம்
**இளவரசி சேலைச் சோலை**
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-2031)

நாட்டில் மக்கள் அனைவரும் சுபீட்சமாக வாழ தேரேறும் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
**கலா ஸ்ரோர்ஸ்**
பழைய கண்டி, காரைநகர்
(சி-2033)

உள்நாடு, வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புக்களைத் துல்லியமாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ள
**லிங்கம் தொலைத் தொடர்பு நிலையம்**
ஆலடி: 0602 - 213061, 0777 - 713297
வலந்தலை: 021 - 222 5281, 0712 - 373441
(சி-2035)


மலர் அமைப்பு: ஆ.தியாகலிங்கம்




# அதிகரிக்கும் வெப்பம்

அவுஸ்திரேலியாவில் வெப்பநிலை உயர்வும், வரட்சியும் - அதனால் காட்டுத்தீயும் ஏற்பட உள்ளதாக அண்மையில் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தும், அத்துடன்



உஷ்ண வலய நாடுகளுக்கான நோய்களும் அதிகரிக்கலாமெனவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

வளிமண்டலத்தில் காபனீரெட்சைட்டின் அதிகரிப்பால் பூமியின் மேற்பாகம் வெப்பம் கூடுவதை "பச்சை வீட்டு விளைவு" (GREEN HOUSE EFFECT) எனப்படும். காபனீர் ஒக்சைட்டின் அளவை பூமியில் கட்டுப்படுத்தும் (KYOTO PROTOCOL) அமைப்பில் அவுஸ்திரேலியா கையொப்பமிட, மேலும் சூழலின் வெப்பநிலை அதிகரிப்பு உலகின் நீர் வளத்தை (WATER REGOURCE) பாதிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

உலகின் பவளப் பாறைகள் (CORAL REEFS) தமது நிறங்களையும் இழந்து விடலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால், பொருளாதார முன்னேற்றம் தொடர்பான செயற்பாடுகளின் போது, வெப்ப அதிகரிப்பைக் குறைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

# திரை விமர்சனம்

## ஜூட்

தமிழ் சினிமாவின் வழக்கமான பாணியில் வரும் ஹீரோ VS வில்லன் மோதல் கதைதான் இந்தப் படம். இந்த வெற்றி மிக்ஸரினை சரியான விகிதத்தில் கலந்துகொடுத்திருக்கிறார் இயக்குநர். கிராமத்திலிருந்து தன் அப்பாவிற்கு வைத்தியம் பார்க்க சென்னைக்கு வருகின்றார் ஸ்ரீகாந். இவருக்கு சென்னையில் வில்லனாக வருகிறார் விஜயன். அத்துடன், மீராஜஸ்மினுடன் காதல். விவேக்குடன் கொமெடி. இப்படியாக கதை வேக வேகமாக நகர்கின்றது.



வழமையாகப் பொறுமையான பாத்திரத்தில் பார்த்துப் பழகிப்போன ஸ்ரீகாந். இந்தப் படத்தில் கோபக்காரன். அப்பாவிடம் கனிவு, அண்ணனிடம் பாசம் என்று செண்டிமெண்ட் சார்ந்தாக வலம் வருகிறார்.

பிரேக் இல்லாத பைக்கில் தொடர்ந்து விபத்துக்களைச் சந்திக்கிறார் விவேக். விஜயனின் வில்லத்தனத்தில் நிறையப் புதுமைகள் தெரிகின்றன. இது அவருடைய பாணி தான்போலும்.

வித்தியாசாகரின் வித்தியாசமான பாடல்களில் ஒரு வகையான போதை இருக்கிறது. "கட்டப்பொம்மா கட்டபொம்மா" பாடல் போதையின் உச்சக்கட்டம். சண்டைக் காட்சிகளிலிருந்த ஒலிப்பதிவுத் திறமை மற்றைய காட்சிகளில் கிளன்போல்ட் இருந்தாலும் ஜூட் - திரைப்படம் போட்டியில் ஓரளவு ரன் எடுக்கும்.

- PNS -

# பயணக்குறிப்பு

காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக காலநிலை அவதானிகள் (CLIMATOLOGIST) தெரிவித்து வருகின்றார்கள். இதனால், கடல் பிரயாணங்களில் அதன் நாளாந்த நிகழ்வுகளைக் குறித்துக்கொள்ளும் புத்தகங்களை (LOG BOOKS) பிரித்தானியாவிலுள்ள பல்கலைக்கழகத்தின் காலநிலை தொடர்பான விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் கடல் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் கடல் பிரயாணத்தில் ஈடுபட்ட கப்பல்களில் நாட்குறிப்புப் புத்தகங்களை ஆராய்ந்து வருகின்றனர். இவற்றை ஆராய்வதன்மூலம் அறியாத தகவல்களைப் பெற்று வருவதாக மேலும் தெரிவித்தார்கள்.

உலகின் 75% பரப்பளவு நீரால் சூழப்பட்டிருந்தபோதும் - காலநிலை தொடர்பாக போதிய தகவல்கள் கிடைக்கவில்லை எனவும், தெரிவித்துள்ளார்கள். இதனிடையே 1750 தொடக்கம் 1850 ஆகிய காலப்பகுதியினை ஆராய்ந்தனர்.

நாடுகள் தொடர்பான ஆய்வில் (EXPLORATION) ஈடுபட்ட ஜேம்ஸ் குக் (JAMES COOK) உட்பட பலரது கடல்பிரயாணக் குறிப்புகளை ஆராய்ந்து பார்த்தனர்.

மேலும் கடந்த காலத்தில் காலநிலைகளைத் தொடராக ஆராய்வதன்மூலம், வரும் காலத்தில எப்படிப்பட்ட காலநிலை உருவாகலாம் என்பதை ஆரூடம் (PREDICT) கூற முடியும் எனவும் தெரிவித்தார்கள்.

முன்னர் காலநிலை அவதானிப்புக்களை உரிய கருவிகள் கண்டுபிடிக்காத காரணத்தால், மனிதர்கள் அவதானித்தவற்றையே குறிப்பெடுக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

அடுத்து தமது அவதானிப்புக்களைக் குறிப்பெடுப்பதற்குப் பாவித்த மொழியியலையும் அறிய முடியாதிருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.



மேலும் காற்றின் வேகமும், அதன் திசையும் காலநிலை அவதானிப்பில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம், காற்றின் உயர், தாழ் அமுக்கங்களை அவதானிக்க முடியும். காற்றின் அழுத்த மாறுபாடு, மழைவீழ்ச்சி, பனிக்கட்டி உருவாதல், வெப்பநிலை, முகில் கூட்டம், சூரிய வெளிச்சம் ஆகியவற்றை நிர்ணயிக்கின்றன.

# குறையும் காந்தப்புலம்



பூமியின் காந்தப்புலனின் செறிவு (MAGNETIC FIELD) குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். இதனால், உலகின் சில பாகங்களில் கதிர்வீச்சு (RADIATION) அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில செயற்கைக் கோள்களில் இந்தக் கதிர்வீச்சின் தாக்கத்தை அறியக்கூடியதாக அமைந்துள்ளது. காந்தப்புலன்களின் செறிவு குறைந்துவிடும் நிலையில் திசை அறிகருவியின் (COMPASS) வடக்கு பக்கத்தைக் காண்பிக்கும் ஊசி (NEEDLE) தெற்கை நோக்கிச் செல்லலாம்.

கடந்த 11/2 நூற்றாண்டுக்கு முன்னர் காந்தப்புலன் தொடர்பான கண்காணிப்பினை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் கண்காணிப்பில் பிரேசிலுக்குக் கரையோரப்பகுதியில் 30 வீதம் குறைவாகக் காணப்பட்டது.

பூமியின் உட்பகுதியில் ஏற்படும் அளவுக்கதிகமான வெப்பம், பூமிக்குள் காணப்படும் நிக்கல், இரும்பு ஆகிய உலோகங்கள் பூமியின் மேற்பகுதியை நோக்கிச் சுழல்வதால் (CHARNING), இந்தக் காந்தப்புலங்கள் ஏற்படுவதாகக் காணப்படுகிறது.

# பயங்கர மலைப்பாம்புகள்

இந்தோனேசியாவில் சிறிய தீவு ஒன்றில் சூவா என்ற இனத்தைச் சேர்ந்த மலைப்பாம்புகள் (PYTHON) அருகிவருவதை அவதானித்தார்கள். 10 ஆண்டுகளுக்கு முன் இந்த வகையான பாம்புகள் பரந்தளவில் காணப்பட்டன. இவை விவசாய விஸ்தரிப்புக்காகவும், அரிய உயிரினங்களை (EXOTIC PET) செல்லப் பிராணிகளாக விற்பனை செய்யும் தொழில்களினாலும் இந்த இனங்கள் அழிக்கப்பட்டுவந்தன.



பிரித்தானியாவில் ஒரு மிருகக்காட்சிச்சாலை இந்த வகையான பாம்புகள் சிலவற்றை மீண்டும் அவற்றின் முட்டைகளிலிருந்து பெருக்குவதற்கு (BREED) திட்டமிட்டது. இவை முட்டையிலிருந்து வெளியேறும்போது, மஞ்சள் நிறமாகவும், முதிர்ச்சியடையும் போது கறுப்புநிறமாகவும் மாற்றமடைகின்றன. கண்கள் வெள்ளைநிறமாகவும் காட்சியளிக்கின்றன. இவையே இந்த இனப்பாம்புகளை அடையாளப்படுத்துகின்றன.

# குரங்குகள் மூலம் பரிசோதனை

இரண்டு மிருகவதை தடுப்புச் சங்கங்கள் (ANIMAL RIGHT GROUPS) பரிசோதனைகளுக்காக ஆய்வுகூடங்களில் குரங்குகளைப் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளன.

அண்மையில் கேம்பிரிட்ச் சர்வகலாசாலை - குரங்குகளைப் பரிசோதனைக்குப் பாவிப்பதற்கென ஆய்வுகூடங்களை அமைப்பதற்கு அனுமதி கொடுத்திருந்தது.

குரங்குகளை நரம்பியல் தொடர்பான ஆய்வுகளுக்கு உட்படுத்துவதற்காக இந்தப் பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மனிதனுக்கும், குரங்குக்கும் நரம்பு தொடர்பான ஒற்றுமை இருப்பதாகக் கருதியே, குரங்குகளைப் பரிசோதனைக்குட்படுத்த முடிவு செய்துள்ளார்கள்.



நூலகம்

# புதியவகை கார்



ஐதரசன் வாயுவையும், சூரிய ஒளியையும் சக்தியாகப் பாவித்து அவுஸ்திரேலிய கண்டத்தை ஒரு முனையிலிருந்து, மறுமுனைவரை பிரயாணம் செய்துள்ளது புதிதாக வடிவமைக்கப்பட்ட கார். உலர் தகன எஞ்சின் (**INTERNAL COMPUSTING ENGINE**) ஒன்று செயற்படும்போது காபனீரெட்சைட்டு, நைதரசன், காபன் மொனக்சைட்டு எனப்படும் நச்சு வாயுக்கள் ஆகியன வளிமண்டலத்தை அசுத்த மடையச் செய்கின்றன.

ஆனால், தற்போது உருவாக்கப்பட்ட காரில் இருந்து வெளியேறுவது (**EXHAUGT**) நீர் மாத்திரமே. ஐதரசன் - வளியிலுள்ள ஒட்சிசனுடன் சேர்ந்து எரியும்போது, சக்தியைக் கொடுப்பதோடு, நீரை மாத்திரமே உற்பத்தி செய்கின்றது.

இந்த காரை ஜப்பானிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். மேலும் இந்த காருக்கு அப்பொலோன்டைன் (**APOLLONDINE**) எனப் பெயரிட்டுள்ளார்கள். கிரேக்கர்கள் சூரியன், நீர் ஆகியவற்றுக்கான கடவுளை இந்தப்பெயரில் அழைத்தார்கள்.

இந்தக் கார் 2533 மைல் தூரத்தைப் பிரயாணம் செய்துள்ளது. விரைவில் கார் உற்பத்தி செய்யும் கொம்பனிகள் இந்தக் காரை உற்பத்தி செய்வதற்கு முற்படலாம் என இதன் வடிவமைப்பாளர் தெரிவிதுள்ளார்.

# சூழல் மாசடைதல்



நாளாந்த வாழ்வை இலகுபடுத்துவதற்கான பரந்தளவில் நவீன சாதனங்களை (**MODERN GADGETS**) மக்கள் பாவித்து வருகின்றார்கள். இவை சூழலில் பல மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. குறைவான சக்தியில் (**ENERGY EFFICIENT**) பாவிக்கக்கூடியவை என விளம்பரப்படுத்தி, அதிகளவில் விற்பனை செய்துவருகின்றனர். ஆனால், இவை சூழல் மாசடைவதை (**ENVIROMETAL POLLUTION**) அதிகரிக்கவே செய்கின்றன.

தற்கால வாழ்க்கையில் விஞ்ஞான முன்னேற்றத்தினால் மக்கள் தனித்து வாழ்வதில் அதிக நாட்டம் செலுத்தி வருகின்றனர். இதனால், ஒவ்வொரு தனிமனிதனும் பல சாதனங்களைப் பாவிக்கவேண்டியுள்ளது.

இதன்மூலம் அதிக பொருட்களை உற்பத்தியாளர்கள் தயாரிக்கவேண்டியுள்ளது.

மக்கள் கூட்டாக வாழும்போது, ஒரு பொருள் எல்லோரது தேவைகளையும் பூர்த்திசெய்யும். உற்பத்தி அதிகரிக்கும்போது வளிமண்டலத்தில் மாசடையக்கூடிய வாயுக்களும் அதிகரிக்கின்றன.

மேலும், மீண்டும் பாவனைக்குகந்ததாகப் பொருட்களை மாற்றுவது (**RECYCLING**) சிறந்த வழி எனவும், இதனால் தேவையற்ற பொருட்களை மீண்டும் தேவையான பொருட்களாக மாற்றப்படுவதாகவும் கருதுகின்றன.

ஆனால், இந்த முறையால் சூழல்மாசடைதலை முற்றாகத் தவிர்க்க முடியாததென அறிந்துள்ளார்கள். நீரைச் சிக்கனமாகப் பாவித்தல், நடந்து செல்லுதல், முடிந்தளவிற்குத் துவிச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்தல், பொதுமக்களின் பாவனைக்கான வாகனங்களைப் பாவித்தல் சூழல் பாதுகாப்பிற்கு உதவுகின்றன.

# இணையம் ஒரு பார்வை



**Internet** என்று அழைக்கப்படுகின்ற இணையம்- இன்று உலகளாவியரீதியில் பரவலாக்கப்பட்ட சர்வதேச் தொடர்பு சாதனமாக விளங்குகின்றது. இதனுடைய தந்தை என்று வர்ணிக்கப்படுபவர் 'விளட்சேர்ல்' என்பவர். அவர் தற்போது இதனை நினைத்துக் கவலைப்படுகின்றாராம். ஆரம்பத்திலிருந்த இணையத்துக்கும், தற்போது பாவனையிலிருக்கின்ற இணையத்துக்குமிடையில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இணையம் என்பது ஒருவகையான கணினி மென்பொருள் என்றே கூறலாம். 1970 ஆம் ஆண்டளவில் இந்த இணையம் இவ்வளவு தூரத்திற்கு முன்னேறும் என எவரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆனால், 1986 ஆம் ஆண்டளவில் இணையத்தினை **Hardware** இற்குள் புகுத்தும் முயற்சிகள் ஆராய்ச்சியாக ஏற்படுத்தப்பட்டது. பெரும்பாலும் இராணுவரீதியான முயற்சிகளில் பெரு வெற்றியை இணையம் தேடித்தந்தது.

1990 ஆம் ஆண்டளவில் **MCI** என்ற தபால் சேவை- இணையம்மூலம் மேற்கொள்ளப்பட்டது. உலக வர்த்தகச் சந்தையில் இணையம் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து வைத்திருப்பதனை எவரும் மறுக்கமுடியாது. 1972 - 1982 இடையிலான காலப்பகுதியில் அதிகளவு இணையமாற்றமே ஏற்பட்டது என்று கூறலாம். ஆனால், தொலைத்தொடர்பில் இதனுடைய பாவனை - இந்தக் காலப் பகுதியில் தோன்றியதனைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், இன்று இணையம் பல தீயசெயல்களுக்கும் பாவிக்கப்படுகின்றது. உதாரணமாக - வைரஸ்களை இணையத்தின்மூலம் அனுப்பி, கணினிகளைச் செயலிழக்கச் செய்வது என்பது ஒரு தீயசெயலாகும். நாங்கள் இணையத்தினை நல்ல வழிகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். உண்மையில் இணையம் என்பது ஒரு சிறிய உலகம். இதனை எங்கள் உள்ளங்கைக்குள் கொண்டு வரமுடியும்.

# பயங்கரவாத மீன்

பிரன்கா (**PIRANHA**) எனப்படும் தென்னமெரிக்க ஆறுகளில் வசிக்கும் ஒருவகை மீன் இனம்- அண்மைக்காலங்களில் அதிகளவில் அந்த ஆறுகளில் நீச்சலுக்கு வருபவர்களின்மீது தாக்குதல்களை (**ATTACKS**) மேற்கொள்வதாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் இந்த மீனின் தாக்குதலுக்கான காரணத்தை ஆராய்ந்தபோது, அப்பிரதேசத்தில் ஆற்றின் குறுக்காகக் கட்டப்பட்ட அணைக் கட்டுக்கள் (**DAMS**) முக்கிய பங்கினை வகித் திருந்ததனை அவதானிக்கமுடிந்தது.

அணைக்கட்டுக்களின் குறுக்கே அமைக்கப்படும் வாசல்கள் (**FLOOD GATES**) நீரின் ஓட்டத் தினைக் கட்டுப்படுத்த முயல்வதாகவும், இதனால் இந்தவகை மீன்கள் அதிகரிப்பதாகவும் தெரிவித்தார்கள்.



மேலும் அணைக் கட்டுக்குட்பட்ட பகுதி - உல்லாசப் பிரயாணிகளுக்குப் பெயர்பெற்ற இடமாகவுள்ளது.

முன்னர் இந்த மீன்கள் நீராடுபவர்களுக்கு எதுவித தாக்கங்களையும் ஏற்படுத்தவில்லை. 2002 ஆம் ஆண்டுக்குப் பின் எவ்வாறு தாக்குதல்கள் அதிகரித்ததென்பதை பிரேசில் நாட்டின் உயிரியல் பேராசிரியர் "இவான் சசிமா" ஆராய்ந்தார். "பிரான்காஷ் மீன்கள்" தமது குடம்பிகளை (**LARVAE**) குளத்து நீருக்கு இடையிலுள்ள தாவரங்களில் (**SUB MERGED PLANTS**) குறிப்பாக, கயசிந் (**HYACINTH**) எனப்படும் தாவரத்திற்கிடையில் பாது காக்கின்றன. நீர் வேகமாகச் செல்லும்போது, இந்தத் தாவரங்களையும் இழுத்துச் செல்கின்றன. (**SWEPT AMAY**). ஆனால், அணைக்கட்டுக்கள் இந்தத் தாவரங்களை ஓரிடத்தில் நிற்க வைப்பதால் இந்த இனம் பெருகுகின்றது. பொதுவாக இந்த வகை மீன்கள் ஒருவரைக் கடிக்கும்போது, தசையைப் பிடிங்கி எடுப்பதால், பலவேளைகளில் மனிதர்களுக்கு உயிர் ஆபத்தையும் ஏற்படுத்துகின்றன.

# வாரம் ஒரு யோகாசனம்

## தோதி



சுத்தமான போத்தல் ஒன்றில் நீரை விட்டு, சிறு உப்புக்கட்டியைப் போடவும். அந்த உப்புக்கட்டி கரையும்வரை தண்ணீரைக் குலுக்கவும். பின்னர் அதனைக் குடிக்கவும். பின் வயிற்றுப் பாகங்களை லோசாக 5 தடவை குலுக்கவும். சாதாரணமாக முன் குனிந்து வயிற்றை எக்கவேண்டும். வாய்மூலம் கை விரல்களை விட்டு வாந்தியெடுக்கவேண்டும். உடலிலுள்ள விசபித்த நீர் வெளியேறும். இந்தப் பயிற்சியை காலையில் மட்டும் செய்யவேண்டும். 10 நாட்களுக்கு ஒரு தடவை மட்டும் செய்யவேண்டும். நித்தம் செய்தால், உடல் பலவீனமடையும். இந்தப் பயிற்சியை வீட்டில் வளர்க்கும் நாய் மற்றும் புலி போன்ற காட்டுவிலங்குகள் செய்கின்றன. வயிற்றில் ஏதாவது கோளாறு இருந்தால் - நாய், புலி புற்களைச் சாப்பிட்டு வயிற்றை எக்கி முன்குனிந்து விசப்பித்த நீரை வாந்தியெடுக்கின்றது. உடலைச் சீர்செய்கின்றது.

## நன்மைகள்

மிகச் சிறப்பானது. மண்டைச்சளி, தலைப்பாரம், கண்ணெரிச்சல், மூக்கடைப்பு, காதடைப்பு, நாவுவறட்சி, தொண்டைக்கரகரப்பு, ஆஸ்த்துமா, காசநோய், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறுகள், குணமாகும். சிறுவர்கள், கர்ப்பம் தரித்த தாய்மார்கள், குடற்புண் உள்ளவர்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இந்தப்பயிற்சியைச் செய்யப்கூடாது.

தருபவர் - மா.மகாநேசன்.

இன்று பவளவிழாக்காணும் கலைஞர் நவாலியூர் நா.செல்லத்துரை

# ஒரு பன்முகக் கலைஞனின் உள்மன எண்ணங்கள்...



நாடகத்துறையில் நடிகராக, ஆசிரியராக, இயக்குநராக இருப்பவரும் - கவிதை, சிறுகதை, கதை, நாவல் எனப் பல்கலை இலக்கியப் பணியை ஆற்றுபவரும், மெல்லிசை மெட்டு அமைப்பாளருமாகிய கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரை இன்று தமது 75 ஆவது வயதினைப் பூர்த்தி செய்கின்றார்.

கடந்த 52 வருடங்களாக பற்பல பட்டங்கள், பாராட்டுக்கள், கௌரவங்கள், விருதுகள் பெற்று இன்றும் நம்மிடையே வாழ்ந்து, கலைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றி வரும் நா.செல்லத்துரையை இன்றைய தினம் சகல கலை இலக்கிய வட்ட நண்பர்களும் ஒன்றுகூடி கௌரவித்துப் பாராட்டி மகிழ்விக்க விழைகின்றார்கள்.



இந்தவகையில், சிறப்புக்குரியவரான நா.செல்லத்துரையை அவரது வீட்டில் சந்தித்து உரையாடினோம். அவர் எம்முடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

நான் நாடகத்துறையில் தான் அதிகம் அக்கறையுடையவன். அதில்தான் நிறையப் பணிகள் ஆற்றியுள்ளேன். படித்துக்கொண்டிருந்த காலத்தில் - முதன்முதலாக 'சர்வாதிகாரி' என்ற ஒரு நாடகம் நடிக்கவேண்டி ஏற்பட்டது. அப்போது அந்த நாடகத்தில் நடித்ததன் பின்னர், என்னைப் பல கரங்கள் வாழ்த்தின. அந்த வாழ்த்துக்கள் நாட கத்துறையில் தொடர்ந்தும் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தது.

என்னுடைய நடிப்பைப் பார்ப்பவர் கள் - சிவாஜியின் நடிப்பைப்போன்று இருக்கின்றது. அவரைப் பின்பற்றித் தான் நடிக்கின்றார் என்று கூறுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான யாரையும் பின்பற்றி நடிக்கவில்லை என்று தான் கூறுவேன். ஏனென்றால், சிவாஜிகணேசன் - சினிமாத்துறைக்கு 1953 ஆம் ஆண்டு தான் வந்தார். ஆனால், நான் அதற்கு முன்பே நடிக்கத் தொடங்கி விட்டேன்.



எனக்குப் பல்வேறு பட்டங்கள் கிடைத திருக்கின்றன. அவையாவுமே எனக்குப் பெருமையானவையே. இவற்றில் நான் முதன்மையானது என்று கருதுவது 'கலாபூஷணம்' என்ற பட்டத்தைத்தான். அதைத்தான் நான் அதிகம் பாவித்தும் வருகின்றேன். ஏனெனில், அந்தப்பட்டம் அரசாங்கம் எனக் குத்தந்த பட்டமாகும்.

நவாலியில் வசித்த நாடகக் கலைஞர் சொர்ணலிங்கம் என்னுடைய நாடகங்களைப் பார்த்து இருக்கின்றார். எனக்கு கலைமணி என்ற பட்டத்தைத் தந்துள்ளார்.

அதேவேளை, நான் 'இனிச் சாகலாம். ஏனெனில், எனக்கு'ஒரு வாரிசு உருவாகிவிட்டது' என்று எனக்குச் சொல்லியுள்ளார். என்னைப் புகழ்ந்து அவர் சொல்லிய வார்த்தைகளை இன்றும் நான் நினைவு கூருகின்றேன்.

என்னுடைய காலத்தில் டொக்டர் நந்தி, சி.வி.கே.சிவஞானம், புரொக்டர் கேசவன், டொக்டர் சிவராசா, காலஞ்சென்ற சீனிவாசன் ஆகியோர் என்னோடு சேர்ந்து நடித்துள்ளார்கள்.

எல்லோரும் இசை, நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தவேளை, நான் 'மயானம் காத்த மன்னன்' என்ற நாடகத்தை உரை வடிவில் ஆற்றினேன். அந்த நாடகம் பற்றி விமர்சிக்கும்போது, 'அந்த நாடகம் - அரிச்சந்திர நாடகத்தையே மிஞ்சுகிறது' என்ற வகையிலான விமர்சனங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை ஆவணங்களாக என்னிடம் தற்போதும் உள்ளன. அவற்றை யாரும் பார்க்கலாம்.

என்னுடைய கலை வாழ்விற்கு மனைவி எந்தவிதமான தடைபோட்டதும் இல்லை. நான் என் மனைவியிடம் முதற்தடவை கூறினேன் - 'இரண்டாம் தடவையாகத்தான் உன்னைத் திருமணம் செய்து கொள்கின்றேன்' என்று. அவள் ஒருமுறை பயந்து விட்டாள். பின்னர் நிலைமையை விளக்கினேன்.

நான் முதல்முறையாக நாடகத்தைத் திருமணம் புரிந்துவிட்டேன். அந்தக் கருத்தில்தான் நான் இதைக் கூறியதாகத் தெரிவித்தேன். இதைக் கேட்டதும் மனைவி சந்தோசம் அடைந்தார். என்னுடைய நாடகப்பணிக்கு மிகுந்த ஒத்துழைப்பை அவர் வழங்கியுள்ளார். சில நாடகங்களில் பின்னணிப் பாடல்களைக்கூட அவர் பாடியுள்ளார். அவரும் ஒரு பாடகர் என்பதை இந்த இடத்தில் கூறவிரும்புகிறேன். என்னைச் சரியாகப் புரிந்துகொண்டு, எனக்கு மிகுந்த ஒத்துழைப்பை என் மனைவி வழங்கியுள்ளார்.

நான் நாடகங்களைத் தயாரிக்கும்போது, ஒரு காட்சி நாடகங்களைத் தயாரித்து, அதை மேடையேற்றி வந்தேன். 1964 ஆம் ஆண்டு ஆறு நாடகங்கள் அடங்கிய 'உலகம் உங்கள் கைகளில்' என்ற ஒரு காட்சி நாடகங்களை எழுதினேன். அப்போது பேராசிரியராக இருந்த அ.வித்தியானந்தன் இதுபற்றித் தனது கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

'ஒரு காட்சி நாடகங்களை முதன் முதல் எழுதிய ஒருவர் நவாலியூர் செல்லத்துரை என்பவர்தான். இப்படியாக நான் நாடகங்களைப் புதியதொரு வகைக்குள் உருவாக்கி வழங்கி வந்தேன்.

கண்டியில் நான் அதிகம் இருந்த காரணத்தினால், யாழ்ப்பாணத்து மக்களைவிட கண்டிமக்களே அதிகம் என்னைக் கௌரவித்துள்ளார்கள். 'சகல கலாவல்லவன்' என்ற பட்டத்தை அவர்கள் வழங்கியுள்ளனர்.

கண்டியில் 1961 ஆம் ஆண்டு ஒரு நாடகம் நடித்துக்கொண்டிருந்தேன். அப்போது அந்த நாடகத்தில் வாள் சண்டை நடப்பதுபோன்ற ஒரு காட்சி. அந்தக் காட்சியில் வாள்களை வைத்து நடித்துக் கொண்டு இருந்தோம். வாள்வீச்சு என்னுடைய மண்டையில் பட்டு, மண்டை உடைந்து இரத்தம் வழிந்து கொண்டிருக்கின்றது. இடையில் நாடகம் நிறுத்தப்படவில்லை. நாடகக் காட்சிமுடியும் வரையும் இப்படியே நடித்துக்கொண்டிருந்தோம். இதனை என்றுமே மறக்கமுடியாத நிகழ்ச்சியாகக் கருதுகின்றேன்.

தற்போது நடிக்கப்படுகின்ற நாடகங்கள் - புதுவிதமான உத்திகள் பலவற்றைக் கையாண்டு நடத்தப்படுகின்றன. ஆயினும், அவற்றை மக்கள் எவ்வளவுதூரம் புரிந்துகொள்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

புரிதல் இல்லாத நாடகங்களாகவே அவை நடத்தப்படுகின்றன என்பதே எனது கருத்து. சமூகத்தில் பல்வேறு வகையில் நிகழும் பிரச்சினைகளை நாடகங்கள் வெளிப்படுத்தவேண்டும். ஏன் நாடகங்கள் போடப்படுகின்றன என்பதை உணர வேண்டும். அதற்கேற்ப நாடகங்கள் போடப்படவேண்டும்.

எதிர்காலத்திலும் பல நாடகங்களைச் செய்ய இருக்கின்றேன். சிந்துநடைக் கூத்து முதலான கூத்து வகைகளையும் நடத்துகின்ற யோசனைகளும் உண்டு.

நான் கடமையாற்றிய பாடசாலைகளில், என் கடமைகளைச் சரிவரச் செய்துகொண்டே என் கலைப் பணிகளை ஆற்றிய காரணத்தால், என்னை எல்லோருக்கும் பிடித்திருந்தது. கடமையாற்றிய இடங்களில் எதுவித பிரச்சினையும் எழவில்லை.

ஈழத்து திரைப்படத்துறை வளர்ச்சியில் நடிகராகவும், 'ஸ்கிறிப்ற்' எழுதியவன் என்ற வகையில் எனக்கு நிறையப் பங்கு உண்டு. என்னுடைய 'ஸ்கிறிப்ற்'றுக்கு இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் 'A கிரேட்' சான்றிதழ் வழங்கியுள்ளது. சிறுபணமும் தந்துள்ளது.

ஈழத்தில் திரைப்படத்துறை- 'சிறிமா' ஆட்சியில் பெற்ற இடம் பின்னர் வந்த காலங்களில் பெறவில்லை. இந்தியத் திரைப்படத்திற்குத் தடைவித்து, இலங்கைத் திரைப்படத்துறைக்கு ஒரு முக்கிய இடத்தை அவராட்சி பெற்றுத்தந்தது.

பின்னைய காலங்களில் இவ்வாறில்லாமல், இந்தியத் திரைப்படங்கள் இலங்கைக்குள் வந்தமையால், அதனோடு போட்டிபோட்டு வளரமுடியாத நிலை இலங்கைத் திரைப்படத்துறைக்கு வந்துவிட்டது. தற்போது 'ஸ்கிரிப்நெட்' ஒன்று உருவாகியிருக்கின்றது. அது வந்து என்னை ஒருமுறையேனும் கேட்கவில்லை 'ஸ்கிறிப்' எழுதித்தா என்று அவர்கள் கேட்டிருந்தால் அல்லது கேட்டால், நான் எழுதத் தயாராகவே உள்ளேன்.

நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் - ஒற்றுமையாகவும், ஒழுங்குடனும் செயற்படவேண்டும். பண்பாடுகளிலிருந்து விலகாமல், கலையுணர்வுகளை வெளிப்படுத்தவேண்டும்.

எல்லா வகை நாடகங்களும் தேவை என்று கருதி, அவற்றையும் தயாரித்து வழங்கவேண்டும் என்ற கருத்துக்களைக் கூறவிரும்புகின்றேன்.

**சந்திப்பு**
**மணிசேகரன் - நகுலன்**

செய்திக் கட்டுரை

ந.கஜமுகன்

# புனரமைக்கப்படாதுள்ள கண்டி வீதியால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கும் மக்கள்



கண்டி வீதி திறக்கப்பட்டு பத்தொன்பது மாதங்களாகின்றது. ஆனால் வீதியோ இன்னமும் ஒழுங்காக புனரமைக்கப்படவில்லை. இதனால், கண்டி வீதியூடாக பயணம் மேற்கொள்ளும் பயணிகள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக தென்மராட்சியில் மீசாலை, கொடிகாமம், சங்கத்தானை, சாவகச்சேரி, நுணாவில், கைதடி, நாவற்குழி உள்ளிட்ட இடங்களின் வீதிகள் - பாரிய குன்றுங்குழிகளுமாக உள்ளதோடு, வீதிகளின் சில இடங்களில் இரு மருங்கும் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இதனால், விபத்துக்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்தோடு, கண்டி வீதியில் நடந்து செல்லும் பாதசாரிகள் துவிச்சக்கரவண்டிகளில் பிரயாணம் மேற்கொள்பவர்களும், மக்களும் எதிரே வரும் வாகனங்களுககுள் விழுந்தெழவேண்டிய பரிதாபநிலை தொடர்கதையாகவே உள்ளது.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சி பிரதேசம் பாரிய யுத்த அழிவிற்குள்ளாகி கண்டி வீதியானது பாரிய சேதத்திற்குள்ளாகியிருக்கிறது.

எனினும், கண்டிவீதி - கடந்த ஏப்ரல் மாதம் திறக்கப்பட்டது. எனவே, இந்த வீதி மீள புனரமைக்கப்படும் என நம்பிய மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

சம்பந்தப்பட்ட தரப்போ - வீதிகளில் உள்ள பாரிய குழிகளைக் கவனியாது, ஏனோதானோ என்று சிறிய குழிகளுக்குத் தாரை ஊற்றி விட்டு, தமது கடமையை நிறைவு செய்தது.

இதனால், துன்பங்களை அனுபவிப்பது மக்களே. தென்பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கில் மக்கள் யாழ். குடாநாட்டிற்கு வந்து போகின்றனர். வர்த்தக நோக்கில் பல வாகனங்கள் தினமும் வந்து போகின்றன.

எத்தனையோ நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் வந்து சுற்றிக்கொண்டு போகின்றார்கள். அவர்களாவது இதனை எடுத்துரைத்து, சம்பந்தப்பட்ட தரப்பிற்குக் கூறினார்களா?

அதைவிட, யாழ். மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது தென்மராட்சியில், கண்டிவீதி மிகவும் மோசமான நிலையிலுள்ளதென எடுத்துரைத்தார்களா? ஏதாவது நிதியுதவி செய்தார்களா? வீதியைப் புனரமைக்க.

முதியவர் இவ்வீதியால் பயணம் மேற்கொள்வது - உயிர்போய் வருகின்ற மாதிரி இருக்கிறது. என்கின்றனர். அவர்கள் கூறுவதிலும் உண்மையுள்ளது.

முழுமையாகப் புனரமைக்காவிடினும், பகுதி பகுதியாகவாவது இந்த வீதியிலுள்ள குன்று குழிகளை நிரப்பலாம் தானே என்கின்றனர் மக்கள்.

சம்பந்தப்பட்ட தரப்பு இனியும் அசமந்தப்போக்கைக் கடைப்பிடியாது, இந்த வீதியைப் புனரமைப்பார்களா?

மேலும் தென்மராட்சியில் கண்டி வீதியின் சில இடங்களில், வீதியின் இரு மருங்கும் கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகின்றது. அதுவும் அப்படியே இருக்கிறது.

வீதியைப் புனரமைப்பது குறித்து உறுதிசெய்த பின்பே, வீதிகளில் கற்கள் பறிக்கவேண்டும். அதை விடுத்து, நினைத்தவுடன் கற்களைப் பறித்துவிட்டு, சம்பந்தப்பட்ட தரப்பு மௌனமாகிவிட, பாதிக்கப்படப் போவது பொதுமக்களே.

ஒடுக்கமான வீதியில் இருமருங்கும் கற்களை பறித்து விடுவதால், எதிரெதிரே வரும் வாகனங்கள் விலகிப்போக இடம் காணாமையால் விபத்துக்குள்ளாக வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படுகிறது.

துவிச்சக்கரவண்டியில் சுமைகளுடனோ, தனியானவோ செல்லும் பிரயாணிகள் வாகனங்கள் எதிரே வரும்போது, இடம் கொடுக்க விலக முற்பட்டு - வீதிகளில் பறிக்கப்பட்ட கற்குவியல்களுக்கு மேல் விழுந்தெழும் சம்பவங்களும் நிகழ்கின்றன.

அத்துடன், இரவுவேளையில் கண்டிவீதியின் தென்மராட்சி பகுதியில் போதிய வீதிவிளக்கின்மையால், துவிச்சக்கரவண்டியில் பயணம் மேற்கொள்பவர்கள் குன்று குழிகளில் விழுந்தெழுகின்றனர்.

எனவே, மக்கள் படும் அவலங்களை கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

தென்மராட்சியில் கொடிகாமத்திலிருந்து கைதடி, நாவற்குழி வரையான கண்டி வீதியே மிகவும் சேதமடைந்த நிலையிலுள்ளது. எனவே, இதனைத் துரிதகதியில் மீளப் புனரமைத்து மக்களின் பயணங்களை இலகுவாக்குவார்களா?

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்பாரா?

நேரத்துக்கு நேரம் சூழலின் தன்மைக்கேற்ப தனது அரசியல் கருத்துக்களைக் கூறுவதும், பின்னர் அதற்கேற்ப தனது கொள்கைகளை மாற்றுவதும் அதற்கு வரட்டுத்தனமானதும், ஏற்றுக்கொள்ளமுடியாததுமான காரணங்களைக்கூறி நியாயப்படுத்த முயல்வதும், ஜனாதிபதி சந்திரிகாவின் மரபியல்ரீதியிலான இயல்பாகும்.

அவரது இந்தக் குணாம்சம் காரணமாக, சிறிலங்காவின் அரசியலில் அவர் போட்ட குத்துக்கரணங்கள் அநேகம்.

குறிப்பாக, இனப்பிரச்சினை தொடர்பாக, 1990 களின் நடுப்பகுதியிலிருந்து இன்றுவரை அவர் கூறிவரும் கருத்துக்களும், கடைப்பிடித்துவரும் கொள்கைகளும், கையாண்டுவரும் யுத்திகளும், நடைமுறைப்படுத்திவரும் செயற்பாடுகளும், முன்னுக்குப்பின் முரண்பட்ட தன்மையைக் கொண்டவையாக இருப்பதனாலேயே, இந்த நாட்டில் அரசியல் மற்றும் அரசியல் சார்ந்த சமூக அவலங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

முடிவற்றதாக நீளும் இந்த நெருக்கடிகளைத் தொடர்ந்து நீடிக்க வைப்பதன் மூலமே, தமது அரசியல் நலன்களை ஸ்திரமாக பேணிக்கொள்ள நினைக்கும் குறுகிய - தேச நலனுக்கு ஒவ்வாத மனோபாவம், ஆட்சி அதிகாரத்தில் தம்மை நிலைநிறுத்திக்கொள்வதில் தமது கவனத்தையும் குவிமையப்படுத்தி நிற்கும் சிங்கள தலைமைகளின் பாரம்பரியம் இப்போது சந்திரிகாவினால் கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றதென்றால் அதில் கருத்து வேறுபாட்டிற்கே இடமில்லை.

ஆட்சிக்கு வருமுன்னர் சமாதானம், பொருளாதார அபிவிருத்தி, சமூக மேம்பாடு, சமஉரிமை, என்பன பற்றி உணர்ச்சிவசமாக உள்ளம் சிலிக்க பேசுவோர், அதிகாரம் கைகளில் வந்ததும் அவற்றையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, தமது பதவிக் கதிரையை பாதுகாப்பாக பற்றிப் பிடித்துக்கொள்ள அவ்வப்போது என்னென்ன குயுக்திகளைக் கையாள முடியுமோ, அவற்றையெல்லாம் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தியே செய்துமுடிக்கும் அசாதாரண தன்மை அவர்களுக்கே உரியதாகும்.

இம்மாதிரியிலான் செயற்பாடுகளில் ஜனாதிபதி சந்திரிகா கைதேர்ந்த ஒருவர் என்பதை கடந்த ஏழாண்டு கால பகுதிகளை அவராகவே நிரூபித்துள்ளார்.

அண்மையில் அவர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் சமாதான நகர்வுகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது தெரிந்த விடயமே.

சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்கு அத்தியாவசியம் என, அனைத்துத் தரப்பினரும் கருதும் அதிகாரங்களை ரணில் தலைமையிலான அரசிடமிருந்து அவர் பறித்துக்கொண்டமைக்குக் காரணம் - அவர் வெளிப்படையாகத் தெரிவித்த நியாயப்படுத்தல்கள் யாவும் ஏற்றுக்கொள்ளமுடியாத அபத்தங்கள் எனச் சர்வதேச சமூகமும் உணர்ந்துள்ளமையால்தான், ஜனாதிபதிமீது சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டியதற்காக, பிரதமருடன் இணக்கத்திற்கு வருமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டியநிலை ஏற்பட்டது.

சமாதான முன்னெடுப்பினைத் தீர்மானமெடுக்கும் நிறைவேற்று அதிகார வலுவைக்கொண்ட ஜனாதிபதியே, இனிமேல் முன்னெடுக்கவேண்டும் என்ற பிரதமர் ரணிலின் கூற்றில் இருக்கும் நியாயத்தன்மையைச் சந்திரிகா அறியாதவருமல்ல.

ஆனால், அந்தப் பொறுப்பினை ஏற்க அவர் தயாரில்லை. ஒரு நியாயமான அரசியல் தீர்வை முன்வைக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ ஜனாதிபதி தயாராக இல்லை என்பதும் வெளிப்படை. அதற்காகவே அதனை ரணிலின் பொறுப்பில் விட்டுவிட்டு, தான் பின்னால் நின்று முட்டுக்கட்டை போட்டு, அவருக்குச் சிக்கலை ஏற்படுத்தவிரும்புகிறார்.

சமாதான பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கம் - வெறுமனே பேசிக்கொண்டு காலம் கடத்துதல் அல்ல... தீர்மானங்களை எடுத்தால், நடைமுறைப்படுத்தல் ஆகியன இதில் அதிமுக்கியம் வாய்ந்த விடயங்களாகும். இதனை ரணில் அவர்களால் இப்போதுள்ள நிலையில் மேற்கொள்ளவேமுடியாது.

ஆகவே, சந்திரிகா மீதான சர்வதேச அழுத்தம் அவர் எதிர்கொள்ளவேண்டிய ஒன்றாக அமைந்துவிட்டதில் வியப்பில்லை.

தற்போது இஸ்லாமாபாத்தில் நடைபெறம் சார்க் நாடுகளின் உச்சிமாநாட்டில் 'சமாதானத்தை முன்னெடுப்பதில் தானும் பிரதமரும், அரசாங்கமும் உறுதியாக இருப்பதாகப் புதிய பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி செய்திருப்பது, இந்த அழுத்தம் காரணமாக ஏற்பட்ட ஒன்றேயாகும்.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றைப் பிரதமரும், அரசும்தான் உறுதிசெய்யவேண்டும்'.

அவரது கூற்று ஆத்மார்த்தமானதெனில், சந்திரிகாவே சமாதானமுயற்சிகளுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாமே!

ஏற்கனவே ஜனாதிபதி சமாதான முயற்சிகளைப் பொறுப்பேற்றால், தான் ஆதரவளிக்கத் தயார் என ரணில் வெளிப்படையாக அறிவித்துவிட்டார். அதிகாரமுள்ள - மக்கள் ஆணை பெற்றவர்கள் எவராயினும் அவர்களுடன் தாம் பேசத் தயாரென விடுதலைப் புலிகளும் அறிவித்துள்ளனர். இந்த நிலையில் பொறுப்பை ஏற்க ஜனாதிபதி தயார் எனப் பகிரங்கமாக அறிவிப்பாரா?

அப்படியாயின், அதனை சார்க் மாநாட்டில் வைத்து அறிவிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

## நாடும் நடப்பும்




### புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் உடன்படிக்கை குறித்து

# தமிழ்ச்செல்வன் கருத்துக்கு ரவூப் ஹக்கீம் மறுப்பு தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், முஸலிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை செல்லுபடியற்றதாகி விட்டதென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன தெரிவித்த கருத்துக்களை, தாம் வன்மையாக கண்டிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவரான ஹக்கீம் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கையும், தந்திரோபாயமான செயற்பாடாகுமெனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் முஸ்லிம் காங்கிரஸால் திட்ட வரைபு ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், மற்றைய அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து இது தொடர்பாக கலந்துரையாடி தீர்மானம் எடுக்கவேண்டும். எனினும், வெகுவிரைவில் தமது இறுத்தித்திட்டவரைபை முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கல்வி மேம்பாட்டு பேரவையினர் சங்கமம் இம்மாதம் 21 ஆம் திகதி கிளிநொச்சியில்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினரின் தேசிய மட்டப் பேரவைச் சங்கமமொன்று - எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிதா ஜோசப் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் சங்கம நிகழ்வில், பன்னிரண்டு கல்வி வலயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒரு நாள் முழு அமர்வாக நடைபெவுள்ள இந்தச் சங்கம நிகழ்வில், கல்வித்துறை அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. இங்கு ஆராய்ந்து எடுக்கப்படும் தீர்மானங்களை உரிய முறையில் அமுல்படுத்துவதன்மூலம் தமிழீழ பிரதேச கல்வியை மேலும் அவிவிருத்தி செய்ய முடியுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஐந்து கல்வி வலயங்களும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் இருந்து தலா இரு கல்வி வலயங்களும், கிளிநொச்சியிலிருந்து ஒரு கல்வி வலயத்தையும் சேர்ந்த தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதிநிதிகள் இந்தச் சங்கமநிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# அரச ஊழியர் சம்பள உயர்வு; சுற்று நிருபம் அனுப்பிவைப்பு!

வரவு - செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு - அரசதுறை ஊழியர்களுக்கான 10 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அறிவிக கப்பட்டவாறு, அரசதுறை ஊழியர்களுக்கான 10 வீத சம்பள அதிகரிப்பு சுற்றுநிருபம் - அரசதிணைக்களங்களுக்கு பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சம்பள அதிகரிப்பின் மூலம் சிற்றூழியர் தரத்திலான ஒருவரின் சராசரிச் சம்பளமாக வருடமொன்றிற்கு 15,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 36.76 சதவீத சம்பள அதிகரிப்பாகும்

இந்தச் சுற்று நிருபத்தின்படி - அரசாங்க ஊழியர் ஒருவர் தற்போது தாம் பெறும் சம்பளத்தில் 10 வீத அதிகரிப்பை அல்லது 1250 ரூபா. இதில் எது கூடியதோ அதைப் பெறுவார். இணைந்த சேவை அலுவலர் ஒருவரின் சராசரி சம்பளம் வருடாந்தம் 15.000 ரூபாவினால் அதிகரிக்கும். இது 31.32 வீத சம்பள அதிகரிப்பு ஆகும். ஏனைய சேவைகளின் அதிகரிப்பு வருடாந்தம் 97,500 ரூபாவில் இருந்து 112,500 ரூபாவாக அதிகரிக்கும். இது 15.30 வீத அதிகரிப்பாகும்.

புதிய சம்பள அதிகரிப்புக்கு ஏற்ப மேலதிக கொடுப்பனவு இணைந்தபடி அதிகரிக்கப்பட்டுள்ளது.

# போதியளவு மழைவீழ்ச்சி இல்லாமையால் நெல் விளைச்சல் குறைவடையும் அபாயம்

### கமநல சேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போதிய மழை இல்லாத காரணத்தினால், இந்த வருடம் நெற்செய்கை பெரும் பாதிப்படைந்துள்ளதாக யாழ்.கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த வருடம் மழை, போகம் தவறிப்பெய்த காரணத்தினால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும், இதனால் விளைச்சல் குறைவடையும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த வருடம் 9000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பில் பெரும் பகுதிகளுக்கு உரிய காலத்திற்கு போதியளவு நீர் கிடைக்காதநிலை காணப்படுகின்றது. இதனால், நெற்கதிர்கள் இன்னும் வெளிவராத நிலையிலும், வெளிவந்த நெற்கதிர்கள் பலவும் சேதமடைந்துள்ளதாகவும் காணப்படுகின்றது.

வடமராட்சியின் வல்லைப்பகுதி மற்றும் வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் குளத்தடிப் பகுதி ஆகிய இடங்களிலுள்ள நெல்வயல்கள் நீரின்றி மோசமாகப் பாதிப்படைந்துள்ளதாகவும், வயல் நிலங்களில் பல பிரிந்து காணப்படுவதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

வருடந்தோறும் தைப்பொங்கல் தினத்திற்கு புது அரிசி எடுத்தே பொங்குவது வழமையான விடயம். ஆனால், இந்த வருடம் தைப்பொங்கலுக்கு பின்னரே நெற்கதிர்களை அறுவடை செய்யக்கூடிய நிலையுள்ளதாகவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதால் அடுத்த வருடம் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்பட்டாலும், அரிசியின் விலையில் பெரும்பாலும் மாற்றம் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மரநிழலின்கீழும் தரையிலுமாக கல்விபயிலும் வன்னி மாணவர்களின் நிலை கவலைக்குரியது

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இரு வருடங்கள் ஆகியும், வன்னி மாணவர்கள் - மரநிழல்களின் கீழும், பிளாஸ்ரிக் பாய்களில் தரைகளில் அமர்ந்துமே, தமது கல்வியைத் தொடரவேண்டிய அவலநிலையில் உள்ளனர் எனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

இந்தப் பகுதியின் கல்வி நிலைமை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்குச் சமுதாய அமைப்பான 'நிகொட்' திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் புனரமைப்புக்காக 190 மில்லியன் ரூபாவிற்கு மேல் ஒதுக்கப்பட்டு, 12 பாடசாலைகளில் இரண்டு மாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் அரசாங்கம் எம்மீது திணித்த போரின் காரணமாக - எமது மாவட்டத்தின் வளங்கள் யாவும் அழிக்கப்பட்டன. அந்த வகையில், எமது பெரும் வளமான கல்விக்கூடங்களும் தரைமட்டமாக அடித்து நொருக்கப்பட்டன. இதன் விளைவாகவே எமது மாணவர்கள் மரநிழலிலிருந்து கல்வி கற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பும், அரசாங்கம் போதுமான அளவில் இங்குள்ள பாடசாலைகளைப் புனரமைத்துத் தரவில்லை. இதனால் எமது மாணவரின் கல்வி நிலைமை அவலம் நிறைந்ததாகவுள்ளது.

நிகொட் திட்டத்தின்கீழ் - கிளிநொச்சி மத்தியகல்லூரி, இந்துக் கல்லூரி, கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை, பிரமந்தனாறு மகா வித்தியாலயம், புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை, புன்னை நீராவி அ.த.க. பாடசாலை, பூநகரி-நல்லூர் மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகிய பன்னிரண்டு பாடசாலைகளிலுமே இரண்டுமாடிக் கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், இதற்கான ஒப்பந்தங்களைப் பெறுவதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், இரண்டு முறையாக விண்ணப்பம் கோரப்பட்டு, மூன்றாம் முறையாக ஒப்பந்தம் கோரப்பட்டபோதே ஒப்பந்தகாரர்கள் வேலைகளைப் பொறுப்பேற்றனர். அவர்களில் ஒருவர்கூட எமது மாவட்டத்தைச் சேர்ந்தவரல்ல, அனைவரும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே.

இந்தப் பாடசாலைகளுக்கான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டிய போது, நாம் அனைவரும் மகிழ்வடைந்தோம். ஆனால், இன்றுவரை எந்தவொரு கட்டடமும் பூர்த்திசெய்யப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. இதனால், எமது மாணவர்கள் தொடர்ந்தும் மரநிழலிலிருந்தே கல்வியைக் கற்கவேண்டிய அவலநிலை தொடர்கிறது என்றார்.

இதேவேளை, அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற, மாவட்ட அபிவிருத்தி தொடர்பான பரிந்துரைகளில் - கல்விக்குப் போதிய இடம் ஒதுக்கப்படவில்லையென யாழ். மாவட்ட கல்விமான்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (9)



சுவாமி சச்சிதானந்தாவின் முதலாமாண்டு நினைவில் அவரது ஞாபகார்த்தமாக அண்மையில் வெளியிடப்பட்ட புத்தக வெளியீட்டு விழாவில் ஆறுதிருமுருகன் மங்கள விளக்கேற்றுவதையும், பூரண யோக சமாசத்தலைவர் சிவோதயன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

### மணிவாசகர்விழா 3 ஆம் நாள் நிகழ்வு

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்தும் மணிவாசகர் விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில், மா.க.ஈழவேந்தன், பண்ணிசைப் புலவர் சிவஞானம், தமிழருவி சிவகுமாரன், ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### இருவர் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

செபமாலைத்தாசர் சபைக்கு தம்மைப் பணிபுரிய அர்ப்பணித்த இருவர் குருக்களாக திருநிலைப் படுத்தப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த ஜோசப் உதயகுமார், சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த ஜோர்ச் அன்ரனி ஆகிய இருவருமே குருக்களாக திருநிலைப் படுத்தப்பட்டனர்.

இந்த இரு குருக்களின் பணி சிறக்க பாதுகாவலனின் அன்பு நெஞ்சங்கள் வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

## வெங்காயம், புகையிலைச் செய்கைகளில் குடாநாட்டு விவசாயிகள் அதிக ஆர்வம்

இந்த வருடம் வெங்காயம் மற்றும் புகையிலைச் செய்கைகள் - குடாநாட்டிலே அதிகளவில் மேற்கொள்ளப்படுவதாக யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சென்ற வருடங்களை விட, இந்த வருடம் சின்னவெங்காயம், பெரிய வெங்காயம், புகையிலை போன்ற பணப் பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் அதிகம் நாட்டம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த வருடங்களில் சமாதான உடன்படிக்கையின் பின்னர் குடாநாட்டிலிருந்து வெங்காயம், புகையிலைப் பயிர்கள் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிந்தன. இதனால் இவற்றின் விலைகளும் குடாநாட்டில் சற்று அதிகரித்துக் காணப்பட்டன. இதனால், பல விவசாயிகள் இவ்வருடம் அதிகளவில் இந்த பயிர்களைச் செய்கை பண்ணி வருகின்றனர். அதிகளவு விளைச்சல் காரணமாக இவற்றின் விலைக்ள் பெரும்பாலும் வீழ்ச்சி அடையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால், உள்ளூர் உற்பத்திகளை செய்கைப் படுத்துவதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### வயற் பாடசாலை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கெயார் நிறுவனத்தால் அளவெட்டி மேற்குப் பகுதியில் வயற் பாடசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையின் ஊடாக அப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இளம் விவசாயிகளுக்கு விவசாயத்துறை சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதோடு, உதவிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. கெயார் நிறுவனம் இப்பிரதேச மக்களுக்கென கிணறு அமைத்துக் கொடுத்தல் மற்றும் மாதர் கழகம் மூலமாகவும் பல் வேறு உதவிகளைச் செய்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு

(இணுவில்)

இணுவில் சிவகாம சுந்தரி சன சமூக நிலையத்திற்கு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக வி.யோகரூபனும், செயலாளராக ம.யோகானந்தும், பொருளாளராக கை.பரமேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலேயே இத் தெரிவுகள் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

### தென்னங்கன்று விநியோகம்

(அளவெட்டி)

அளவெட்டி மகாஜன சபை சன சமூக நிலையத்தினரால், நிலைய உறுப்பினர்களுக்கு நல்லினத் தென்னங்கன்றுகள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன.

நிலையத் தலைவர் வை.சுப்பிரமணியம் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, அச்சுவேலியிலுள்ள தென்னம் நாற்றுமேடையொன்றிலிருந்தே இந்தத் தென்னங்கன்றுகள் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஐம்பதிற்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு மொத்தமாக ஐநூறு தென்னங்கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, தென்னைகளை நாட்டுவதற்கான விவசாய ஆலோசனைகளும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தியாகி அறக்கொடை நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நாளை நடைபெறவுள்ளது. நிறுவனப் பொருளாளர் ஸ்ரீதேவி ஞானரெட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் -

யாழ். பல்கலைக்ககழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகவும், சர்வதேச பொருண்மிய மதியுரையகத் தலைவர் எம். சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

தியாகி அறக்கொடை நிறுவனத்தால் மலரொன்றும் நாளை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இம் மலரின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் பெற்றுக் கொள்வதோடு ஆய்வுரையை பேராசிரியர் க.சின்னத்தம்பி நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியம் ஒன்று வழங்கப்படவுள்ளதாகவும், இறுதியாக கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச)

## இந்த ஆண்டு உலர் உணவு நிவாரணத்தில் கோதுமை மாவுக்குப் பதிலாக சிவப்பரிசி

### புனர்வாழ்வுக்கிளை திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான நிவாரணத்திற்குக் கோதுமை மாவிற்குப் பதிலாக சிவப்பரிசி வழங்கப்படவுள்ளதாக - யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுக்கிளையைச் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நிவாரணத்திற்கான கோதுமை மா வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து அவரிடம் கேட்டபோதே - அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கைக்கான கோதுமை மாவின் இறக்குமதி அதிகரித்துச் செல்வதால், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் வீணடிக்கப்படுகின்ற நிலை உருவாகிவருகின்றது.

அது மட்டுமன்றி, அரசும் அதிகமான பணத்தை இந்தக் கோதுமை மாவிற்கான இறக்கு மதிச் செலவாகச் செலுத்த நேரிடுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டே நாட்டின் சகலபகுதிகளிலும் நிவாரணத்திற்கான கோதுமை மா விநியோகம் நிறுத்தப்பட்டு, உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனால், உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்கக்கூடியதாக அமையும் அதேவேளை, கோதுமை இறக்குமதியையும் குறைக்க முடியும்.

உடலுக்கு ஆரோக்கியமும், சத்தும் கிடைக்கக்கூடியதாக சிவப்பரிசி மூலம் கிடைக்கும் மா அமைவதால், இந்த வருடத்திற்கான நிவாரணத்திற்கு - கோதுமைமாவிற்குப் பதிலாக சிவப்பரிசியே வழங்கப்படவுள்ளது.

இதற்காக இந்த ஆண்டு நிவாரணத்திற்காக ஆயிரம் மெற்றிக்தொன் சிவப்பரிசி உள்ளூரிலேயே கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அதேபோன்று 2 ஆயிரம் மெற்றிக்தொன் நாட்டரிசியும் உள்ளூரிலேயே கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதன்மூலம் உள்ளூர் விவசாயிகளின் உற்பத்திகளும் ஊக்குவிக்கப்பட அதிக வாய்ப்பிருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.கிரிசாந்த்
முகவரி : மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

### நான்காவது அகவையில்



பெயர் : கே.அபிஷாரணி
முகவரி : 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### ஆறாவது அகவையில்



பெயர் : பே.சுகேதன்
முகவரி : 'ஈஸ்வர இல்லம்', அச்செழு, நீர்வேலி.

### எட்டாவது அகவையில்



பெயர் : ச.ஹம்சலா
முகவரி : சிவகாமியம்மன் கோயிலடி, இணுவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------
---------------------------
முகவரி :-------------------
---------------------------
பிறந்த ஆண்டு:--------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------
பெற்றோர் ஒப்பம்

# அமெரிக்கா மீது புனிதப் போரை முஸ்லிம்கள் தொடரவேண்டும்!

## ஒளிநாடாவில் பின்லேடன் தெரிவிப்பு



அல்கொய்டா அமைப்பின் தலைவர் பின்லேடனால் அனுப்பப்பட்டதாக கருதப்படும் ஒளிநாடா ஒன்றை 'அல் ஜசிரா' அரபியத் தொலைக் காட்சி ஒளிபரப்புச் செய்துள்ளது.

அச்செய்தியில் முஸ்லீம் மக்கள் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரைத் தொடர வேண்டுமெனவும், ஈராக்கின் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பிற்கு துணைபோகும் வளைகுடா நாடுகள் கண்டிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சென்றமாதம் கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனைப் பற்றியும் பின்லேடன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் குரல்களை பகுப்பாய்வு செய்பவர்கள் அக்குரல் பின்லேடனுக்கு சொந்தமானது எனத் தெரிவித்துள்ளார்கள். போர் ஆயுதங்களை தவிர வேறு எதுவிதத்திலும் ஆக்கிரமிப்பாளர்களுடன் பேச்சுக்கள் இல்லையெனவும் பின்லேடன் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்மீதான ஆக்கிரமிப்பு - வளைகுடா நாடுகள்மீதான ஆரம்ப நிலையெனவும், எண்ணை தான் அமெரிக்காவின் முக்கிய நோக்கம் எனவும் அந்த நாடாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்லேடனும் அவரது உதவித் தலைவர் ஜமன் அல்சாவரியும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளுடையே அமைந் துள்ள மலைப் பிரதேசங்களில் ஒளிந்திருக்கலாம் எனத் தெரிவிக் கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் வாஜ்பாய் – ஜனாதிபதி முஷாரப் ஒரு மணிநேரம் சந்திப்பு நடைபெற்றது

ஆசிய நாடுகளின் சார்க் மாநாடு தற்போது பாகிஸ்தானில் நடைபெற்றுவருகிறது. பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் நேரடியாக ஒரு மணித்தியாலம்வரை நேற்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இருவரும் இரு நாடுகளுக்கும் இடையேயான இருவழி வர்த்தகம், பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை தொடர்பான பேச்சில் ஈடுபட்டனர். இவர்களின் பேச்சுக்களில் மிகுந்த நட்புறவு வெளிப்பட்டதாக பாகிஸ்தானியத் தகவல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுக்கள் இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. தமக்கிடையேயுள்ள பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமென இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்திற்கு கட்டடத்தொகுதியொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் உரையாற்றும்போது தான் அடிக்கல் நாட்டும் கட்டடம் எப்படிப்பட்ட மழை புயல்களுக்கெதிராகவும் செயற்படவேண்டுமென வாஜ்பாய் தெரிவித்திருந்தார்.



இதனிடையே- பிராந்திய தலைவர்கள் ஆசியா நாடுகளின் வளர்ச்சிக்காக உழைப்பதென கருத்துத்தெரிவித்திருந்தார்கள். சுதந்திர வர்த்தக வலயமொன்றை உருவாக்குவதன் மூலம் கூடுதலான பிணைப்புக்களை உருவாக்கலாமெனவும் தெரிவித்திருந்தார்கள்.

உலக நோக்கு

# ஆப்கான் புதிய அரசியல் யாப்பு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது!

ஆப்கானிஸ்தானில் புதிய அரசியல் யாப்பொன்றினை உருவாக்குவதற்கென தூதுக் குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தியுள்ளனர். இதன்மூலம் பல இனங்கள், குழுக்களாக வாழும் ஆப்கானிஸ்தானிய மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கமுடியுமென அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், தற்போது தயாரித்துள்ள யாப்பின்மூலம் அதிகாரம்மிக்க ஜனாதிபதி ஒருவரையும், இரண்டு உதவி ஜனாதிபதிகளையும் தேர்ந்தெடுப்பதற்கு வழியேற்பட்டுள்ளது.

இதனிடையே - ஐக்கிய நாடுகளின் செயலாளரும் அமெரிக்க அதிபர் புஷ்சும் முதல் முறையாகத் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைபபைப் பாராட்டியுள்ளார்கள். ஐக்கிய நாடுகளின் செயலாளர் கோபிஅனான் இதுவொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வெனப் பாராட்டியிருந்தார். மேலும் 502 தூதுக்குழுவினர் பங்குபற்றிய இந்த மாநாட்டில் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலமே இந்த முடிவை எட்டியுள்ளார்கள்.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெர்லினில் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் பின்பே அமெரிக்கா தலிபான் போராளிகளுக்கு எதிரான போரைத் தொடுத்திருந்தது. இந்தச் சமாதான ஒப்பந்தத்தின்பின் எடுத்த பிரகாரமே தற்போதை அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.



சார்க் மாநாட்டில் பங்கேற்க இஸ்லாமாபாத் சென்றுள்ள பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் பிரதமர் ஜமாரியை நேற்று சந்தித்துப்பேசியபோது, கைலாகுகொடுக்கும் காட்சி.

## சார்ஸ் நோய்க்கிருமிகளின் தாக்கம் சீனாவில் தென்பட ஆரம்பித்துள்ளது!

சார்ஸ் நோய்க் கிருமிகளின் தாக்கம் மீண்டும் சீனாவில் தென்பட ஆரம்பித்துள்ளது. இதனால் இந்நோய்க்கிருமிகள் பரவுவதற்குக் காரமெனக் கருதப்பட்ட பல ஆயிரம் புனுகுப் பூனைகளைக் கொன்றுவிட சீன அதிகாரிகள் தீர்மானித்துள்ளார்கள். அண்மையில், குஆங்டொங் மாகாணத்தில் 32 வயதுடைய ஒருவருக்கு சார்ஸ்நோய் தாக்கியிருந்தமை அவரது இரத்தத்தில் காணப்பட்ட வைரசுகள் புனுகுப் பூனையின் உடலில் காணப்படும் வைரசுகளுடன் ஒத்திருந்தமை பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் இவ்வைரஸ் புனுகுப் பூனையிலிருந்து மனிதர்களுக்குத் தொற்றியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குஆங்டொங் மாகாணத்தில் புனுகுப்பூனை இறைச்சி அப்பகுதியில் வாழும் மக்களின் புகழ்பெற்ற ஒரு உணவாகும்.

குஆங்டொங் மாகாணத்தின் சுகாதார அதிகாரியான பெங்லியுசியாங் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புனுகு பூனைகள் கொல்லப்பட இருபதாக மேலும் தெரிவித்துள்ளார். ஆனால், பரந்தளவில் இவ்வகையான பூனைகளை கொல்வது எதிர்விளைவுகளையும் உருவாக்கலாமென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## ஊர்சுற்றி எழுதுவது

அம்மையாருக்கும் பிரதமர் ரணிலுக்கும் ஏற்பட்ட அதிகாரப் போட்டிக்குப் பொதுத் தேர்தல்தான் தீர்வாக முடியும் போலத் தெரிகிறது என்றார் நண்பர்.

மீண்டும் ஒரு தடவை சந்தித்துப் பேசுவோமென்று அம்மையார் விடுத்த அழைப்பை ரணில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாராம். சும்மா சும்மா இரண்டு பேரும் சந்தித்துப்பேசி என்னத்தைக் கண்டது. காலத்தை வீணடித்ததுதான் மிச்சம் எனறார் எதிர் வீட்டுக்காரர்.

காலத்தைக் கடத்தியும் காரியத்தைச் சாதிக்கலாம் என்று இரண்டு பேருமே நினைக்கலாமல்லவா? என்றார் நண்பர்.

அம்மையார் அப்படி நினைச்சுக் காலத்தைக் கடத்தி அடுத்த ஆண்டு ஜனாதிபதி பதவிக்காலம் முடியும் வரை இழுத்தடித்தால் பின்னர் எப்படியாவது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குப்போய் பிரதமர் பதவியைப் பிடித்துவிடலாமென்று நினைக்கலாம். ஆனால், ரணிலுக்கு இப்போது இது அவசரமில்லை.

அம்மையார் எடுத்துக்கொண்ட பாதுகாப்பு மற்றும் அமைச்சுக்களைத் திருப்பிக் கொடுத்தாலொழிய சமாதானப் பேச்சுக்களைத் தொடரமுடியாதென்பது ரணிலின் நிலை.

ரணில் அமெரிக்காவுக்குப்போய் இறங்கியதும் மூன்று அமைச்சுக்களையும் அதிரடி நடவடிக்கையாக அம்மையார் எடுத்துக் கொண்டபோது, ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து மற்றும் பலர் தம்முடன் வந்து சேருவார்கள் என்ற நம்பிக்கை அம்மையாருக்கு இருந்தது.

பலர் கட்சி மாறுவார்களென்று சிலர் அம்மையாருக்கு ஒரு மாயையை ஏற்படுத்தியிருந்தனர். ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு கட்சியைவிட்டு வந்தவர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகளை வழங்கலாமென்று நினைத்திருக்கக் கூடும்.

அம்மையாரின் நடவடிக்கையை எதிர்த்து ரணிலுக்கு ஆதரவு தெரிவித்தல்லவா தேசிய முன்னணியினர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தனர்.

இந்த ஏமாற்றத்தைச் சமாளிப்பதற்காக அம்மையார் தேசிய நல்லிணக்க அரசு என்ற கதையை விட்டுப்பார்த்தார். என்றார் நண்பர்.

இதுவும்கூட எடுபடாமல் போய்விட்டது. இதுக்கும் ஒப்புக்கொள்ளாவிட்டால் மாற்று நடவடிக்கை என்று இப்பொழுது சொல்கிறார் ஜனாதிபதி.

மாற்று நடவடிக்கை என்றால் என்ன? தேர்தல் என்றால் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்கிறார் ரணில்.

இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாக இருப்பவர்களும் திடீர் பொதுத்தேர்தலோ, இடைத்தேர்தலோ வருவதை விரும்பாவிட்டாலும் இன்றைய நெருக்கடிக்குத் தேர்தல்தான் தீர்வு என்றால் சம்மதித்துத்தானேயாக வேண்டும்.

சமாதான முயற்சிகள் போர்நிறுத்தம் ரணில் அரசுக்குள் பொதுமக்களிடம் வரவேற்பையும், நம்பிக்கையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அம்மையாரின் திடீர் நடவடிக்கை அவர்மீது பொதுமக்களுக்கு அதிருப்தியைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது. இது அம்மையாருக்கும் ஓரளவு தெரியும். இதைச சமாளிக்கத்தான் தேசிய நல்லிணக்க அரசு, தேசத்தின் பாதுகாப்பு என்றெல்லாம் சொல்லிச் சமாளிக்கப் பார்க்கிறார்.

தேர்தல் வந்தால் தாங்கள் மிகப்பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சிக்கு வரலாமென்று ரணில் நம்புகிறார்.

தேர்தல் வந்தால் நிலைமையை எப்படிச் சமாளிக்கிறதென்பதுதான் இப்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குள்ள பிரச்சினை.

கிழக்கு மாகாணத்தவர்தான், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையை ஏற்று வழிநடத்த வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்கனவே இருந்து வருகிறது. கிழக்குத் தலைமைக் கோரிக்கையை உடைப்பதற்கு ஹக்கீம் இடைக்கால அரசமைப்பு யோசனையை முன்னெடுத்திருக்கிறார்.

இது எந்தவகையில் ஹக்கீமுக்கு உதவப்போகிறது?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



"மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு பிரதமரை சந்திரிகா அழைத்துள்ளாராம்!

"அப்படியா?"

"சார்க் மாநாட்டிற்கு புறப்படமுன்னரே அவர் இதை பிரதமருக்குத் தெரிவித்துவிட்டாராம்...!"

"பிறகு...?"

"சார்க் மாநாட்டில் சமாதானத்தை முன்னெடுப்பதில் தானும், பிரதமரும், அரசாங்கமும் உறுதியாக இருப்பதாகவும் சந்திரிகா அறிவித்துள்ளாராம்..."

"அப்ப இனிப் பேச்சுவார்த்தை தொடங்கப்போகுதென்று சொல்... அப்பாடா...!"

"பொறு... பொறு... அவசரப்படாதை... ஆயுதக் கொள்வனவுக்கென சீனா சென்ற படையதிகாரிகள் குழு அங்குள்ள ஆயுத விற்பனை நிறுவனமொன்றுக்கு எந்தவிதமான வழமையான நடைமுறைகளையும் செய்யாது ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான கட்டளை வழங்கியிருக்கினமாம்..."

"ஆ...!"

"ஏன் வாயைப் பிளக்கிறாய்... இந்த ஆயுதங்களிலை தொலைதூர தாக்குதலுக்கான ஏவுகணைகள், வெடிபொருட்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களும் அடங்குமாம்..."

"அப்ப மீண்டும் சண்டை தொடங்கப்போகுதே...?"

"ஆருக்குத் தெரியும்... சமாதானத்திற்கான யுத்தமும், யுத்தத்திற்கான சமாதானமும் சிங்கள அரசின் கொள்கை என்று உனக்குத் தெரியாதே...!"

"அப்ப சர்வதேசம் என்ன செய்யப்போகுதாம்...?"

"ஒரு பக்கம் ஆயுதங்களையும் விற்கும்... மறுபக்கம் சமாதானத்தையும் வலியுறுத்தும்...!"

"ஓ... இதுக்குப் பேர்தான்... சர்வதேச ஜனநாயக, சோஷலிச அரசியல்... அப்படித்தானே...!"

தெருவாசி

## சமாதான முயற்சி...

குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டு, இந்தக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கும் வரவுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

## சமாதான...

ரிக்க பிரதி இராஜங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதையடுத்து, ஒஸ்லோவுக்கு சென்ற இவர் - அங்கு நேற்றுமுன்தினம் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் எரிக் சொல்ஹெம் ஆகியோரைச் சந்தித்தார்.

இலங்கையில் சமாதான நகர்வை முன்னெடுப்பது, ரோக்கியோ மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியுதவியின் அடிப்படையில் தற்போதைய நிலைமைகள் தொடாபாகவும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

இலங்கைக்கு தற்சமயம் ரோக்கியோ உதவியின் அடிப்படையில் உலகவங்கியின் சர்வதேச நாணய நிதியமும் விடுவித்த ஒரு தொகைப் பணம் எவ்வாறு செலவிடப்பட்டிருக்கின்றது என்றும் நோர்வே பிரதிநிதிகளிடம் அமைச்சர் மிலிந்த மொறகொட விளக்கிக்கூறினார். (01)

# மாமனிதர் குமார் நினைவுதினம் பல்கலையில் சிறப்பாக அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் - நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாவாந்துறைப் பங்குத்தந்தை கருணாரட்டணம் அடிகளார், யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.செந்தூரன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவர் எஸ்.பஞ்சலிங்கம், தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் எஸ்.கஜேந்திரன் உட்படப் பலரும் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

## கடற்படைக்கு ரோந்துக்...

திரட்டியிருந்தனர்.

கரேஜஸ் கப்பல் இந்தவருட இறுதிக்குள் இலங்கையிடம் ஒப்படைக்கப்படும் எனவும், கப்பலில் உள்ள வசதிகள் குறித்தும் இலங்கை மாலுமிகளுக்கு இந்தக் குழுவினர் பயிற்சிகளை வழங்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

210 அடி நீளமான இந்தக் கப்பல் இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டப் பரிமாற்றத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளது.

அமெரிக்க - இலங்கை நாடுகளுக்கு இடையிலான இராணுவ உதவிகளை உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான திட்டங்களின் அடிப்படையிலேயே, இந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழு இங்கு வருகை தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

## செய்தியாளர்கள் படையினரால்...

மல்வத்த பீடாதிபதிகள் உட்பட இருபதுக்கு மேற்பட்ட பிக்குகள் வருகைதந்தனர்.

மகாநாயக்க தேரர்களின் தலைமையில் செய்தியாளர் மாநாடு ஒன்று பலாலி விமான நிலையத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இதற்கான அழைப்பும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, பலாலி சென்ற ஊடகவியலாளர்கள் - அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் விமானத்திலிருந்து இறங்குவதைப் பார்வையிட அனுமதிக்கப்பட்ட பின்னர் படையினரால் திருப்பிஅனுப்பிவைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சரான ஜயலத் ஜயவர்த்தன இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார். நயினாதீவு ரஜமகா விகாரைப் பொறுப்பாளர் கலாநிதி பிராக்மனவத்த சீவலி தலைமை தேரரே செய்தியாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், பலாலி விமானப்படைத் தளத்திற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் புகைப்படக்கருவிகளைக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படாததுடன், விமானப்படைத்தளத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்டனர். பின்னர் காரைநகர் - நயினாதீவுப் பகுதிகளுக்கு கடற்படையினரின் கடற்படைப் படகுகள் மூலம் வருமாறு படையினர் அழைப்பு விடுத்திருந்தபோதும், அந்த அழைப்பினை ஊடகவியலாளர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். பின்னர், இந்த ஊடகவியலாளர் சந்திப்பை யாழ்ப்பாணத்தில் வைப்பதற்குப் படையினர் தீர்மானத்துள்ளதாகவும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலாலி விமான நிலையத்திற்குச் செய்தியாளர் மாநாடு என்று ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டது குறித்துச் செய்தியாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

## சிங்கள அரசு பேச்சுக்கு...

கள் என ஆராய்வதுடன், சில வேறுபாடுகளைக் கண்டறியவும் முயல்கின்றனர். ஆனால், அவை தோல்வியிலேயே முடிவடைகின்றன.

தமிழர் வரலாறு குருதிகொண்டு எழுதப்பட்டவை. அவை பல அரிய பொக்கிஷங்களைக் கொண்டுள்ளன. அவற்றின் பலன்கள் கனியும்காலம் அருகிலேயே வந்துவிட்டது.

யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவத்தளபதி யாழ்.மக்களுக்கு நல்லதைச் செய்ய விரும்புகின்றார். நல்லவிடயம் அதனையே நாமும் விரும்புகின்றோம். ஆனால், அவர் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் மிகவும் ஏராளமாய் உள்ளன.

வீதிகளில் தேவையற்று நிற்கும் இராணுவத்தை அகற்றட்டும், மக்கள் மீதான இராணுவத்தினரின் சில அசம்பாவிதங்களைத் தடுக்கட்டும் இவையே இன்று யாழ்.மக்கள் விரும்பும் பாரிய மாற்றங்களாகும்.

சிங்கள மக்களில் சிலர் எப்போதும் அடாவடிகளைப் புரிவது பற்றியே சிந்திக்கின்றனர். தமிழ்மக்கள் மீதான அடாவடிகளையும், அத்துமீறல்களையும் குறைத்துவரும் பேரினவாத சக்திகள் தற்போது மிகக்குறைந்த எணணிக்கையிலுள்ள கிறிஸ்தவர்கள் மீது தமது கொலைவெறிப் பாய்ச்சலை மேற்கொண்டுள்ளார்கள். அண்மைக்காலமாக பல கிறிஸ்தவ ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டு வருகின்றமை இதற்குச் சான்றாகின்றது.

இன்று அமரர் மாமனிதர் பொன்னம்பலத்தை நினைவு கூருகிறோம். இவர் தமிழர் அழிவில் குளிர்காயும் அரசியல்வாதிகளைவிட வேறுபட்ட தேச உணர்வுடையவர். தனது உயிரையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களுக்காக வாழ்ந்து உயிர்துறந்தவர். இவரது வழியை ஏனைய அரசியல்வாதிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (ப,ந)

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு...

நீக்கவேண்டும் என்பதற்கான அனைத்து காரணங்களையும் அவர் தனது இந்த வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மகேஸ்வரனை நேற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லன்ஸ்றீட் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சில் வைத்துச் சந்தித்தார். இதன்போதே அமைச்சர் மகேஸ்வரன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கான எழுத்துமூல வேண்டுகோளை அமெரிக்கத் தூதுவரிடம் கையளித்தார். மகேஸ்வரன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமாதான நிலைமைகளை, தென்னிலங்கையிலுள்ள சில தீயசக்திகள் - விடுதலைப் புலிகளுக்கான அமெரிக்கத் தடையை காரணம் காட்டி, குழப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

ஆகவே, அமெரிக்கா புலிகள் மீதான தங்களது தடையை நீக்குமாயின், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை மென்மேலும் சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கு அமெரிக்கா இன்னும் உதவி செய்ததாகவிருக்கும்.

விடுதலைப் புலிகள் ஐக்கிய அமெரிக்காவுக்கோ அல்லது அந்த நாட்டு மக்களுக்கோ அறிந்தவரையில் எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் மகேஸ்வரன்-

தற்போது இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் - அமெரிக்கா தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, இலங்கை வாழ் தமிழ்மக்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க தன்னை மென்மேலும் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர்- விடுதலைப் புலிகளது தடையை நீக்குவதற்கு எமது தரப்பில் எதுவித தயக்கம் இல்லை. விடுதலைப் புலிகளின் தரப்பில் அவர்களது தீவிரவாத நடவடிக்கை மற்றும் ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு இதனை நடைமுறைப் படுத்திக் காட்டுவார்களாயின், இக்கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை ஏற்படும். இந்த எதிர்பார்ப்புக்களை விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தும்படி அமைச்சர் மகேஸ்வரனைக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது மத மாற்ற தடை சம்பந்தாக அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள சட்டமூலம் - யாழ் பிரதேசத்தில் உள்ள தற்போதைய நிலைமை மற்றும் புனரமைப்பு வேலைகள், யாழ்.நூலகம் போன்ற விடயங்கள் சம்பந்மாகவும் கலந்துரையாடப் பட்டது.

## மனோ - மலிக் சமரசப்...

கத் தெரியவருகிறது.

கடந்தவாரம் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து வெளியான இரண்டு காட்டமான அறிக்கைகளின் பின்னணியிலேயே மீணடும் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகள் தடையாக இருப்பதாக அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்திருந்தார்.

அத்துடன், கடந்தவாரம் அரசியல் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவரும்படி அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் - ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதியும், பிரதமரும் தமது கருத்து முரண்பாடுகளை களைந்துவிட்டு நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுத்துவரும் நிலையிலேயே அடுத்தவாரம் மனோ - மலிக் பேச்சுக்கள் ஆரம்பிக்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கொவி செத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 428 திகதி: 05.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | 41 | 49 | 53 | 60 |

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான், டீன்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள். பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக்கருவிகள், விளையாட்டுப் பொருடகள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

குறிப்பு:-

"பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி வரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்"

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542

(சி-1934)

212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.